




Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 30 சோபகிருது வருடம், ஆடி மாதம் 17ஆம் திகதி புதன்கிழமை
(02.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 13, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50







# 13 இன் முழு அமுலாக்கம்!

## இலங்கை அரசுக்கு அழுத்தம் வழங்கிக்கொண்டிருப்பதாக உயர்ஸ்தானிகர் பாக்லே தமிழ் எம்.பிக்களிடம் தெரிவிப்பு



நமது விசேட செய்தியாளர்

13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துமாறே இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்கிவருவதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசுக் கட்சி ஆகிய கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய தூதுவருக்குமிடையிலான சந்திப்பு நேற்று (01) கொழும்பிலுள்ள... 02 பக்கம்

## இன்று கூடுகிறது ஐ.தே.க. செயற்குழு

கே. சுபானி

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் இன்று (02) நடைபெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கும் முகமாக இந்த செயற்குழு கூடவுள்ளது. இதுகுறித்து கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவிக்கையில்,... 02 பக்கம்




வடக்கு, கிழக்கில் பொது வாக்கெடுப்பை நடத்துவதற்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்தி காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

படப்பிடிப்பு: சி. திவியா

## இந்திய தூதுவருடன் முற்போக்கு கூட்டணி வெள்ளியன்று சந்திப்பு

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் இடையில் எதிர்வரும் 04ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொழும்பில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகரின் அழைப்பையேற்று இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வார்கள் என அக்கட்சியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

### கமெண்ட் கந்தர்...

வெளிநாட்டு கோழிகள் பாவம் செஞ்ச கோழிகள் போல... செத்த பிறகும் அதுகளுக்கு ஸ்ரீலங்கா வரவேண்டிய நிலைமை பாருங்கோ...



## 13ஆவது திருத்தம் பற்றிய யோசனைகள் பாராளுமன்றுக்கு!

### ஜனாதிபதி ரணில் தீர்மானம்

நா. தினுஷா

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பலப்படுத்துவதற்கான சகல யோசனைகளையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

அதற்கமைய, 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு தொடர்பில் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் விசேட..... 02 பக்கம்

## குழந்தையின் மரணத்துக்கு கிருமித் தொற்றே காரணம்

### சிறுநீரக சத்திரசிகிச்சையின் பின்னர் உயிரிழந்தமை குறித்து வைத்தியசாலை விளக்கம்

02 பக்கம்

## சினோபெக் எரிபொருளின் முதல் தொகுதி தரையிறக்கம்

நா. தினுஷா


சினோபெக் நிறுவனத்தின் முதலாவது எரிபொருள் தொகுதியை தரையிறக்கும் செயற்பாடுகள் நேற்று (01) ஆரம்பமாகிய நிலையில் இரண்டாவது எரிபொருள் தொகுதி இன்று (02) நாட்டை வந்தடையவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

புதிய விநியோகத்தர்களுக்கு முதல் 12 மாதங்களுக்கு நிதி வசதிகளை முதலீட்டாளர்கள் பெற்றுக்கொடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, உள்நாட்டு சந்தையில் இணைந்துள்ள புதிய விநியோகத்தர்களால் எரிபொருளுக்கான அந்நிய செலாவணித் தேவை எளிதாக்கப்படவுள்ளது.

எரிபொருள் விநியோகத்தர்களுடனான ஒப்பந்தம் இறுதியானதும் நாடு முழுவதுமுள்ள 150 எரிபொருள் நிலையங்களில் சினோபெக் நிறுவனத்தின்... 02 பக்கம்

## தமிழர்களின் பூர்வீக வாழ்விடமாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள்

### இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுமந்திரன் தெரிவிப்பு



1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தது என... 02 பக்கம்




இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க அரசுக்குள் கடும் அதிருப்தியில் இருக்கிறாராம்.

அவரது மாவட்ட முன்னாள் எம்.பி. ஹரிசன் சஜித் பக்கமிருந்து ரணிலின் பக்கம் தாவினார் அல்லவா? ஹரிசனுக்கு முக்கியத்துவம் அதிகமாக வழங்கப்படுவதால் தான் இவ்வாறு அதிருப்தியில் உள்ளாராம் ஷெஹான்

## நேற்றுமுன்தினம் முதல் எரிபொருள் விலை உயர்வு

### மண்ணெண்ணெய் 10 ரூபாவால் குறைப்பு

கே.சுபானி



மூன்று வகையான எரிபொருட்களின் விலைகளில் நேற்றுமுன்தினம் (31) நள்ளிரவு முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்... 02 பக்கம்

## 43 இலங்கையரை கடத்தும் முயற்சி

### ஜோர்தானில் முறியடிப்பு

ஜோர்தானிலிருந்து மேற்குக் கரையூடாக வேறு நாடொன்றுக்கு இலங்கையர்கள் 43 பேரை சட்டவிரோதமாக கடத்தும் முயற்சியை அந்நாட்டுப் பாதுகாப்புப் பிரிவினர் முறியடித்துள்ளதுடன் நான்கு இடைத்தரகர்களை கைதுசெய்துள்ளனர்.

இலங்கையிலிருந்து சுற்றுலா விசாவில் 43 பேரும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். 02 பக்கம்

## பாராளுமன்றத்தில் பெண் ஊழியர்களுக்கு தொல்லை

### அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு சுதர்ஷனி எம்.பி. கோரிக்கை



நா. தினுஷா

பாராளுமன்ற உள்ளகப் பிரிவிலுள்ள பெண் ஊழியர்களுக்கு ஒருசில பிரதானிகள் உள்ளிட்ட அதிகாரிகளால் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்படும் தொல்லை அல்லது அச்சுறுத்தல் தொடர்பில் அதிகாரிகளுக்கு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற... 02 பக்கம்

# ஊடகர் நிலக்சனின் நினைவேந்தல் நிகழ்வு










ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் நிலக்சனின் உருவ படத்துக்கு மலர் மாலை அணியப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டு, சுடரேற்றப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் ஊடக கற்கை மாணவனும் சாரளம் சஞ்சிகையின் ஆசிரியரும் யாழ். மாணவர் பேரவையின் முன்னாள் தலைவருமான சகாதேவன் நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி அவரது வீட்டில் இருந்த வேளை, அவரது வீட்டுக்கு அதிகாலை 5 மணியளவில் சென்ற ஆயுததாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து அவரது பெற்றோர் முன்னிலையில் சுட்டுப் படுகொலை செய்தனர்.

# கைதிகளின் எண்ணிக்கை 200வீதத்தால் அதிகரிப்பு

பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள் ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. மேலும், அதன் அதிகரிப்பு வேகமானது 200வீதத்தால் உயர்ந்துள்ளதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் 13ஆயிரத்து 241 கைதிகளை தடுத்து வைப்பதற்கான இடவசதியே உள்ளதாகவும் இருந்தபோதிலும், தற்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 29ஆயிரத்தை நெருங்கியுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# யாழ் ஆலய திருவிழாவில் தங்க நகைகள் திருட்டு

## நான்கு பெண்கள் கைது

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - நீர்வேலியிலுள்ள பிள்ளையார் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது பெண் ஒருவரின் தாலிக்கொடியையே திருடிய சந்தேகத்தில் 04 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட 04 பெண்களில் இந்தியப் பிரஜை ஒருவரும் உள்ளடங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்த்திருவிழாவில் தண்ணீர்ப் பந்தலில் பானங்கள் வழங்கிக் கொண்டிருந்தபோது பெண் ஒருவரின் தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சிலாபத்தைச் சேர்ந்த 26 வயது பெண், வவுனியாவைச் சேர்ந்த 37 வயதான பெண், மாத்தறையைச் சேர்ந்த 28 வயதுப் பெண் மற்றும் 49 வயதான இந்தியப் பிரஜை ஆகியோர் மக்களால் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 13ஆவது...

அறிவிப்பொன்றையும் வெளியிடவுள்ளார்.

இதன்போது, 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை பலப்படுத்துவது தொடர்பான புதிய சட்டமூலமொன்றை கொண்டுவருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெளிவுபடுத்தவுள்ளார். பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை எவ்வாறு பகிர்ந்துகொள்வது என்பது தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெளிவுப்படுத்தவுள்ளார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி முயற்சித்தாலும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் கட்சிகளின் ஒருமித்த நிலைப்பாடு இன்மையானது ஜனாதிபதியின் செயற்பாட்டுக்கு இடையூறாக இருப்பதாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட பிரதானியொருவர் தெரிவித்திருக்கிறார்.

## குழந்தையின்...

நா.தினுஷா

பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையைத் தொடர்ந்து அண்மையில் உயிரிழந்ததாகக் குறிப்பிடப்படும் குழந்தையின் மரணத்துக்கு சரீரத்தில் ஏற்பட்ட கிறுமித்தொற்றே காரணமென அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.விஜேசூரிய தெரிவித்தார்.

மேலும், சிகிச்சைக்கு முன்னதான சகல பரிசோதனைகளும் உயிரிழந்த குழந்தைக்கு மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் இடதுபக்க சிறுநீரகம் பெரிதாகி, ஒழுங்கற்ற விதத்தில் இருந்தமை பரிசோதனைகளில் உறுதியாகியிருந்ததாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் (31) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் கடந்த டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் இரண்டரை வயது குழந்தைக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட சகல பரிசோதனைகளையும் முறையாக செய்ததன் பின்னரே கடந்த டிசம்பர் மாதம் இந்த சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சம்பந்தப்பட்ட வைத்தியர் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்ளும்போதும், உயிரிழந்த குழந்தையின் இடதுபக்க சிறுநீரகம் பெரிதாகி, ஒழுங்கற்ற விதத்தில் இருப்பதாக பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. அந்த பரிசோதனையின் அடிப்படையில் அந்த சத்திர சிகிச்சை இடம்பெறும் சத்திர சிகிச்சை மத்திய நிலையத்திலும் தனியான ஸ்கேன் இயந்திரமொன்றை கொண்டுவந்ததன் பின்னரே, இந்த ஸ்கேன் பரிசோதனைகள் இடம்பெற்றிருக்கின்றன.

ஸ்கேன் பரிசோதனையை தொடர்ந்து சிரேஷ்ட வைத்தியரொருவருக்கும் அழைப்பு விடுத்து இரண்டாம் நிலைப்பாடொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பின்னர் செயலிழந்திருந்த சிறுநீரகத்துடன் வலதுபுற சிறுநீரகமும் இணைந்தே இருந்திருக்கிறது. அதனால், அந்த வைத்தியருக்கு இதுதொடர்பில் விசேட பரிசோதனையொன்றை முன்னெடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்க வில்லை. பரிசோதனைகளிலும் அது தென்படாது.

இந்த சத்திர சிகிச்சைக்கு முறையான பரிசோதனைகள் வைத்தியசாலையினூடாக முன்னெடுக்கப்பட்டிருந்த பின்னணியிலேயே, இரு சிறுநீரகமும் இணைந்திருந்ததால் பாதிப்படைந்திருந்த சிறுநீரகத்தை நீக்கும்போது மற்றைய சிறுநீரகமும் விலகியிருக்குமென்றே நாங்கள் முடிவு செய்திருந்தோம்.

இந்நிலையில், இன்னுமொரு சிறுநீரகத்தை பொருத்துவதற்கு தீர்மானித்திருந்த நிலையில், குழந்தையின் சரீரத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து அண்மையில் குறித்த குழந்தை உயிரிழந்திருந்தது.

இவ்வாறிருக்கையில், சுகாதாரத்துறையில் இருப்பவர்களே குழந்தையின் சிகிச்சை தொடர்பில் முன்னைய பரிசோதனைகளை மேற்கொள்ளவில்லை.

இயந்திரங்கள் இருக்கவில்லை என்ற அடிப்படையில் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்கள். இந்த குற்றச்சாட்டுகள் முழுமையான தவறான விடயமாகும். சகல பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டது என்பதை குழந்தையின் பெற்றோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றார்.

## 43 இலங்கையரை...

இவர்களை அழைத்துச் சென்றதாக சந்தேகிக்கப்படும் மூன்று ஜோர்தானியர்களும் பாலஸ்தீனர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடைத்தரகர்கள் இலங்கைப் பிரஜைகளை விடுதியொன்றில் தங்கவைத்துள்ளனர். அவர்கள் திடீரென மாயமானதையடுத்து விடுதி உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் உடனடி விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் ஆட்கடத்தல் முயற்சியை முறியடித்துள்ளனர்.

இது தொடர்பில் தீவிர விசாரணைகளை ஜோர்தான் பொலிஸார் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.

## நேற்று முன்தினம்...

வெளியிட்டுள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒக்டேன் 92 வகை பெற்றோல் ஒரு லீற்றர் 20 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 348 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒக்டேன் 95 வகை பெற்றோல் ஒரு லீற்றர் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 375 ரூபாவாகவும் சுப்பர் டீசல் ஒரு லீற்றர் 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 358 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

ஒரு லீற்றர் டீசலின் விலை இரண்டு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 306 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 226 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இதேவேளை, எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் முச்சக்கரவண்டி கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது என முச்சக்கரவண்டி வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

## 13 இன்...

இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இந்திய தூதுவர் கோபால் பாக்லே, பிரதி தூதுவர், அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தரப்பில் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தரப்பில் இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டபோது, என்னென்ன விடயங்கள் இந்திய தரப்பினால் அறிவுறுத்தப்பட்டது என்பது குறித்து இந்திய தூதுவர் விளக்கமளித்தார்.

இரு நாட்டுக்குமிடையில் பாலம் அமைப்பது, மின்சக்தி இணைப்பு உள்ளிட்ட பொருளாதாரம் சார்ந்த விடயங்கள் பேசப்பட்டதாகவும் 13ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கையிடம் அறிவுறுத்தியதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

இரண்டு கட்சிகளும் எப்படியான தீர்வை எதிர்பார்க்கிறீர்கள் என உயர்ஸ்தானிகர் இந்த சந்திப்பில் வினவினார்.

13ஆவது திருத்தத்தை இறுதி இலக்காக கொள்ளவில்லையென்றும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பெற விரும்புவதாகவும் தமிழ் எம்.பிக்கள் குறிப்பிட்டனர். இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தை தாம் அபிவிருத்தி செய்யவுள்ளதாக இந்திய தூதுவர் குறிப்பிட்டார். துறைமுகம், சக்தி, முதலீட்டு வலயம் ஆகியவற்றில் இந்தியா பங்களிக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

13ஆவது திருத்தம் தொடர்பில் இலங்கை ஆட்சியாளர்கள் நீண்டகாலம் ஏமாற்றிவந்ததை சம்பந்தன் இந்த சந்திப்பில் எடுத்துக்கூறினாரென அறியமுடிந்தது.

## சினோபெக்...

எரிபொருள் விநியோக நடவடிக்கை ஆரம்பமாகும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். ட்விட்டர் பதிவொன்றினூடாகவே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில், சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கடந்த மே மாதம் 22ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகியவை கடந்த காலத்தில் எரிபொருள் ஏற்றுமதிக்கு போதுமான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் சவாலை எதிர்கொண்டிருந்த நிலையில், முன்னெடுக்கப்பட்ட தொடர்ச்சியான கலந்துரையாடல்களின் பின்னரே சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தத்துக்கு தயாரானதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சினோபெக் மற்றும் அதன் துணை நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு 45 நாட்களுக்குள் இலங்கையில் செயல்படத் தொடங்கும். இந்த செயல்முறையானது மிகவும் நிலையான மற்றும் நம்பகமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதோடு நாட்டின் வலுசக்தித்துறையை மேம்படுத்துவதற்கும் பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## பாராளுமன்றத்தில்...

மகளிர் உறுப்பினர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, பாராளுமன்ற செயலாளர் நாயகம் சட்டத்தரணி குஷானி ரோஹணதீரவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

இதுதொடர்பில் விரைவான விசாரணைகளை முன்னெடுத்து நடவடிக்கை எடுப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையை சாதாரணமானவொரு விடயமாக எடுத்துக்கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருசில பிரதானிகள் உள்ளிட்ட அதிகாரிகளினால் நீண்டகாலமாக தமக்கு, பல்வேறு அச்சுறுத்தல்கள் இடம்பெற்று வருவதாகவும் இதுபோன்ற செயற்பாடுகளுக்கு முடிவு காணப்படாததால் தாம் பல்வேறு பழிவாங்கல்களுக்கு உள்ளாவதாகவும் பாதிப்புக்குள்ளான பெண் பணியாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பில் செயற்பட்டு தமக்கு நீதியை பெற்றுத்தருமாறு கோரும் அந்த பணியாளர்கள், விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தினால் இதுதொடர்பான சகல தகவல்களையும் இரகசியமாக பெற்றுக்கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒருசில பணியாளர்கள் தமது தொழில் இல்லாமல் போய்விடும் என்ற பயத்தில், இதுதொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு கூட அச்சம் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினை குறித்து எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்ப தயாராக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று கூடுகிறது...

ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆம் ஆண்டு நிறைவு மற்றும் கட்சியின் மாநாடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி நடத்துவது தொடர்பில் ஐ.தே.க முகாமைத்துவக்குழுவின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு நாளை (இன்று) நடைபெறவுள்ள ஐ.தே.க. செயற்குழு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என நேற்று (01) தெரிவித்தார்.

மேற்படி செயற்குழுக் கூட்டத்தின்போது கட்சியின் மாநாடு இடம்பெறும் இடம் மற்றும் மாநாட்டு ஏற்பாட்டுக்குழுவுக்கும் அனுமதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது ஐக்கிய தேசியக் கட்சி முழுநாட்டையும் உள்ளடக்கியதான 135இற்கும் மேற்பட்ட கட்சி கூட்டங்களை நடத்தியுள்ள நிலையில் மேலும் பல கூட்டங்களை நடத்தவுள்ளது.

அனைத்துக் கூட்டங்களும் நிறைவடைந்த பின்னர் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


## பெயர் மாற்றம்

**மொட்டிங்ஹேம் தோட்டம் பிரவுஸ்விக் பிரிவு எனும் முகவரியில் வசிக்கும் 923232214V என்ற தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் கொண்ட சண்முகநாதன் முரளிதரன் ஆகிய நான் சண்முகநாதன் முகளிந்தன் எனும் எனது பழைய பெயரை சண்முகநாதன் முரளிதரன் என மாற்றி பயன்படுத்தி வருகின்றேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.**

**முரளிதரன்**


## தமிழர்களின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம், நீண்டகாலமாக தாமதமாகி வரும் மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடுகள் ஆகிய விடயங்கள் தொடர்பான எமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் நேற்றுமுன்தினம் (31) அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள், 1956ஆம் ஆண்டு முதல், வடக்கு - கிழக்கில் சமஷ்டி ஏற்பாட்டின்மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை நோக்கிச் செயற்படுவதற்கான ஆணையை, தமிழ் அரசியல் கட்சிகளுக்கு தொடர்ச்சியாக வழங்கியுள்ளனர்.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையில் வடக்கு கிழக்கானது தமிழ்ப் பேசும் மக்களின் பூர்வீக வாழ்விடம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் மாகாணங்களுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடங்கலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருந்தன.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் விளைவாக இந்தியா வழங்கிய அனுசரணைகளை இலங்கை ஏற்றுக்கொண்டது முதல் கடந்த 40 ஆண்டுகளாக இந்திய அரசாங்கம் இந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

மிக சமீபத்தில் கூட, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசு, தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றி, சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்துக்கான மறுகட்டமைப்பை முன்னெடுத்துச் செல்லும் என்ற இந்தியாவின் நம்பிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்திருந்தார்.

மேலும், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கும் இலங்கையின் தமிழ் சமூகத்துக்கு சுயமரியாதை மற்றும் கண்ணியமான வாழ்க்கையை உறுதி செய்யவும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றும் என்றும் அவர் தனது நம்பிக்கையை தெரிவித்திருந்தார். பின்னர், செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் இந்திய வெளியுறவு செயலாளர் பின்வருமாறு கூறியிருந்தார்.

''ஒன்றுபட்ட மற்றும் வளமான இலங்கை எனும் கட்டமைப்புக்குள் தமிழ் சமூகத்தின் அபிலாஷைகள், நிச்சயமாக சமத்துவம், நீதி மற்றும் சுயமரியாதைக்கான அபிலாஷைகளை நிவர்த்தி செய்யும் அரசியல் தீர்வை இந்தியா தொடர்ந்து எதிர்நோக்குகிறது என்ற உண்மையின் அடிப்படையில் இதைவிட வெளிப்படையாக எதுவும் இருக்க முடியாது.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துதல் என்பன இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கு தீர்வு காண்பதற்கும், அதனை எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகளாகும் என பிரதமர் மேலும் தெளிவாகக் கூறியிருந்தார். இதுவே எங்களின் நிலையான நிலைப்பாடாக இருந்து வருகின்றதோடு, இது இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போதும் முன்வைக்கப்பட்டது''.

1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டி கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல.

ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். இவ்வாறு அரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப் படுத்தாது விடுவது என்பது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும். எனவே எமது அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக அமுல்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம்.

எனினும், அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யாது. அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பல்வேறு செயல்முறைகள் மூலம் அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்பது, மங்கள முனசிங்க தெரிவுக்குழுவில் இருந்து 2016 – 2019 வரை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இடம்பெற்ற அரசியலமைப்பு பேரவை வரை, மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதவிக்காலத்தின் போது இந்தியாவுடன் குறைந்தபட்சம் மூன்று தனித்தனி கூட்டு அறிக்கைகள் மூலம் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமையை மாற்றியமைக்கும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள சட்ட காலதாமதங்கள் காரணமாக குறைபாடுகளுடன் இயங்கி வந்த ஒன்பது மாகாண சபைகள் செயலிழந்துள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சீர்திருத்தத் தெரிவுக்குழு கடந்த வருடம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் மக்களின் ஜனநாயக உரிமையை மறுப்பதாக இனங்கண்டு முன்பு இருந்த விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தலை நடத்த வேண்டும் என பரிந்துரை செய்ததோடு இதை செயல்படுத்த தகுந்த சட்டம் இயற்ற வேண்டும் என்றும் பரிந்துரைத்தது.

இந்த பரிந்துரைகளுக்கு இணங்க நான் ஒரு தனி நபர் சட்டமூலம் ஒன்றினை தயாரித்து முன்வைத்திருந்தேன், அதன் முதல் வாசிப்பு முடிந்த நிலையில் இந்த சட்டமூலம் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டது. மேலும் இதில் உள்ள சில சரத்துகளில் பரிந்துரைக்கப்பட்ட மாற்றங்களைச் செய்தால், அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை மூலம் சட்டமாக்க முடியும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2022 டிசம்பர் 10ஆம் திகதி இடம்பெற்ற முதலாவது சர்வகட்சி மாநாட்டிலேயே மாகாண சபைத் தேர்தலை இனியும் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தது. அதிகாரப் பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் குறித்தும் நாங்கள் விவாதித்தோம்.

ஜனாதிபதியுடன் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், 2023 ஜனவரி 26ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது சர்வகட்சி மாநாட்டில் மீண்டும் எமது நிலைப்பாட்டை வலியுறுத்தினோம். கடந்த 2023ஆம் ஆண்டு ஜூலை 26ஆம் திகதி நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டிலும் இதே நிலைப்பாட்டையே தெரிவித்தோம்.

இவ்விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. அவ்வாறே உடனடியாக மாகாண சபைத் தேர்தல்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கு அழைப்பு விடுப்பதற்கும் இடையில் எந்த முரண்பாடும் இல்லை. மேலும் கூறுவதானால் ஒன்று இல்லாது மற்றொன்றில் எவ்வித அர்த்தமும் இல்லை.

# மண்டைதீவு புனித பேதுருவானவர் அந்தோனியாரின் கூட்டுத்திருப்பலி





பு.கஜிந்தன்

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - வேலணை, மண்டைதீவு புனித பேதுருவானவர் அந்தோனியாரின் தேவாலயத்தின் வருடாந்த நவநாள் கூட்டுத்திருப்பலி நேற்று சிறப்பாக இடம்பெற்றது.

இத் தேவாலயத்தின் கொடியேற்றம் கடந்த 27ஆம் திகதி ஆரம்பமாகி, நேற்று நவநாள் நற்கருணை ஆராதனையூடான கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இக் கூட்டுத்திருப்பலியினை ஒப்புக்கொடுப் பதற்காக பிரதம அதிதியாக யாழ்ப்பாண மறை மாவட்ட பங்கு குருமுதல்வர் ஜெயரட்ணம் கலந்துகொண்டு திருப்பலியினை ஒப்புக்கொடுத்தார்.

இதில் வேலணை தீவகபகுதி வாழ் கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டு மண்டைதீவு புனித பேதுருவானவர் அந்தோனியாரின் ஆசிர்வாதத்தினை பெற்றுச்சென்றனர்.

# மத வெறியை விதைப்போர் தோல்வியே காண்பர்: பொன்சேகாவுக்கு மறவன்புலவு சச்சி எச்சரிக்கை!



இறுதிப் போரில் படைத்தளபதியாக இருந்து போருக்குப் பின் நாட்டை விட்டு அமெரிக்கா சென்ற சரத் பொன்சேகா, தற்போது இலங்கை சிங்கள பௌத்த நாடு என்கிறார் - என சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நல்லாட்சி அரசில் சஜித் பிரேமதாச அமைச்சராக இருந்தார். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆயிரம் புத்தர் சிலைகளை அமைப்போம் எனக் கொக்கரித்தார்.

கடந்த சில வாரங்களாகவே முன்னாள் படைத்தளபதி சரத் வீரசேகர கொக்கரித்து வருகிறார். இலங்கை சிங்கள பௌத்த நாடு. தீவு எங்கும் புத்தர் சிலைகளை வைப்போம் என்கிறார்.

போரில் வெற்றிக்குப் பின்னால் மதவெறியே வரலாறு. மைசூரைக் கைப்பற்றினோம். மதுரையைக் கைப்பற்றுவோம் என 725 ஆண்டுகளுக்கு முன் அலாவுதீன் கில்ஜியின் படைத்தளபதி மாலிக் கபூர் அதே மதவெறியுடன் தமிழகம் வந்தான். இந்துக் கோயில்களை அழித்தான். அங்குள்ள செல்வங்களைக் கொள்ளையடித்தான்.

தொடர்ந்து அறுபது ஆண்டுகள் தமிழகத்தில் முகமதியர் ஆட்சி. இந்துக் கோயில்கள் இடிந்தன. மசூதிகள் எழுந்தன. இராமநாதபுரத்தின் பெயரே இலாலாபாத் என மாறியது.

அயோத்தியில் பல்லாயிரம் ஆண்டுத் தொன்மையான இராமர் கோயிலை 400 ஆண்டுகளுக்கு முன்பு இடித்தவன் பாபர். அங்கே மசூதியைக் கட்டினான்.

பாபர் வழிவந்த அவுரங்கசீப் காசியில் அருள்மிகு விஸ்வநாதர் கோயிலை முற்றாக அழித்து அங்கே மசூதியைக் கட்டினான்.

அலாவுதீன் கில்ஜி, மாலிக் கபூர், பாபர், அவுரங்கசீப் போன்றோர் வரிசையில், போரின் வெற்றியை மதவெறியாக்குகிறார். அந்தப் படைத்தளபதிகளைப் போலவே இந்துக்களை நோக்கிக் கொக்கரிக்கிறார் சரத் வீரசேகர.

450 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் தென்கோடியில், பல்லாயிரம் ஆண்டு பழமையான, பல்லவர் திருப்பணி செய்த, சீனர் கல்வெட்டு எழுதிய, அருள்மிகு தென்னாவர நாயனார் கோயிலை கத்தோலிக்க மதவெறியோடு இடித்தவன் தளபதி தோமை சொயிசா. அங்கே உலூயிசா தேவாலயத்தைக் கட்டினான்.

416 ஆண்டுகளுக்கு முன்பு கத்தோலிக்கத் தளபதி கான்ஸ்டன்ட்டைன் கச்சதீவில் அருள்மிகு கச்சாபகேச்சரர் திருக்கோயிலைத் தரைமட்டமாக்கினான்.

405 ஆண்டுகளுக்கு முன் இந்து அரசின் சங்கிலி மன்னனைத் தோற்கடித்த கத்தோலிக்க படைத்தளபதி இடீ லீவரா யாழ்ப்பாணத்தில் 400 சைவக் கோயில்களை இடித்தான். அங்கே தேவாலயங்களைக் கட்டுவித்தான்.

மன்னாரில் திருக்கேதீஸ்வரத்தைத் தடயமே இல்லாமல் முற்றுமுழுதாக அழித்தான்.

தோமை சொயிசா வழியில், கொன்ஸ்டன்ட்டையின் வழியில் இடி லீவரா வழியில், மத வெறியோடு இந்துக் கோயில்களைத் தாக்கியோர் அழித்தோர் கொக்கரித்தோர் வழியில் போரில் வெற்றி பெற்ற மதகளிப்பில், வெற்றியைக் கொண்டாடும் மெய்சிலிர்ப்பில் இலங்கை, சிங்கள பௌத்த நாடு என்கிறார் முன்னாள் படைத்தளபதி சரத் வீரசேகர.

வெற்றியும் தோல்வியும் இரவும் பகலும் போல, மாறி மாறி வருவன அறியாரோ, முன்னாள் படைத்தளபதி சரத் வீரசேகர?

போரின் வெற்றிக்குப் பின்னால் நிதானமும் பெருந்தன்மையும் மாவீரன் அலெக்சாண்டருக்கு இருந்தது. இலங்கையில் மாவீரன் எல்லாளனுக்கு இருந்தது.

அத்தகைய நிதானமும் பெருந்தன்மையுமே இலங்கையில் புத்தர் கூறிய அன்பையும் அறனையும் அருளையும் அறிவையும் பெருக்கும்.

இலங்கையின் அழிவுக்கான வாயிலாகப் புத்தர் சிலைகளை, பௌத்த சமயத்தை, புத்தரின் கொள்கைகளை சரத் வீரசேகர நஞ்சாக விதைக்கிறார். படு தோல்வியையே காண்பார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் ஆடி மாதம் 17ஆம் நாள் புதன்கிழமை

மேஷம்: உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள், மற்றவர்கள் உங்களுக்கு பணிந்து நடந்து கொள்வார்கள்.

ரிஷபம்: உடல் உழைப்பு அதிகமாக இருக்கும் நாள். வயிறு தொடர்பான நோயால் அவதி.

மிதுனம்: வீண் குழப்பங்களால் மனம் தளர்வடையும். கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.

கடகம்: புகழ் செல்வாக்கு அனைத்தும் சிறப்பாக அமையும். திடீர் பயணத்தால் நன்மைகள் உண்டு.

சிம்மம்: எதிரிகளை வெற்றி கொள்வீர்கள். தொழில் முன்னேற்றம், பண இலாபங்கள் உண்டு.

கன்னி: உடல் நலத்தை பார்த்துக் கொள்ளுங்கள். அதிர்ஷ்டத்தை சோதித்து அவஸ்தைக்குள்ளாகாதீர்கள்.

துலாம்: வாகனங்களில் அசட்டையாக பயணிக்காதீர்கள். குடும்ப உறவு திருப்திகரமாக இருக்கும்.

விருச்சிகம்: முயற்சிகளில் வெற்றி மேல் வெற்றி உண்டு. இன்றைய தேவைக்குரிய பணம் நிச்சயம் கிடைக்கும்.

தனுசு: வீட்டுத் தேவைக்காக செலவுகள் ஏற்படும். குடும்ப உறவுகளோடு சற்று நிதானமாக உரையாடுங்கள்.

மகரம்: ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத்தில் இருப்பீர்கள். தேவையற்றவர்களின் பிரச்சினைகளில் தலையிடாதீர்கள்.

கும்பம்: ஆணவத்தால் அவமானம் ஏற்படும். உணவு, தூக்கமில்லாமல் சற்று அவதிப்படுவீர்கள்.

மீனம்: எதிர்பாராத பண வரவு மகிழ்ச்சியைக் கொடுக்கும். போட்டிப்பந்தயங்களில் வெற்றிவாகை சூடுவீர்கள்.

**திதி** :பிரதமை பி.ப.8.06 வரை பின் துவிதியை (தேய்)

**நட்சத்திரம்** :திருவோணம் பி.ப.12.58 வரை பின் அவிட்டம்

**யோகம்** :சித்த யோகம பி.ப.12.58 வரை பின் அமிர்த யோகம்

**வார சூலை** :வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்** :மு.ப. 9.04– 10.04 மணிவரை

**ராகுகாலம்** :12.04 – 1.34 மணிவரை

**எமகண்டம்** :7.34 – 9.04 மணிவரை

**குளிகை**:10.34 – 12.04 மணிவரை

**சந்திராஷ்டமம்** :மிதுன ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிஷ்டம்**: கார்த்திகை,உத்தரம், உத்தராடம் ரோஹிணி,அத்தம்,திருவோணம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்:** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739





**நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணனின் 71ஆவது பிறந்த தினம் நேற்று நுவரெலியா இல்லத்தில் கொண்டாடப்பட்டது. இதன்போது சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றதுடன் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள், மடிக்கணினியும் வழங்கப்பட்டது.**

# முதிரை மரப் பலகைகள் கிளிநொச்சி பகுதியில் மீட்பு



பல இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரப்பலகையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைநீராவி பகுதியில் மரப்பலகைகள் இருப்பது தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து நேற்று விசேட அதிரடிப்படையினரால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பல இலட்ச ரூபா பெறுமதியான முதிரை மரப் பலகைகள் மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதுடன் தடயப்பொருட்கள் இன்று(02) நீதிமன்றில் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர்.

# பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண இலங்கை - இந்திய இணைப்பு அவசியம்

## உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட சுட்டிக்காட்டு



பொருளாதார வளர்ச்சியில் இருந்து பயனடைவதற்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கும் இது அவசியமானது என்று மொரகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நிலத்தொடர்புக்கு சார்பாக, இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட கருத்துகளை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

இந்தியாவுக்கும் இந்தியாவுக்கும் செல்லும் பயணத்தை அதிகரிப்பதற்காக தரைப்பாலங்கள், பாலங்கள், குழாய்கள், மின்சாரம் கடத்தும் பாதைகள் மற்றும் தரையிறங்கும் உட்கட்டமைப்புகள் உருவாக்கப்படவேண்டும்.

அத்துடன் தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்குள் தீர்வு காணப்பட வேண்டும். இந்தியாவுக்கும் அதன் அண்டைதீவுக்கும் இடையிலான உறவுகளை வளர்ப்பதற்கு நில இணைப்பு அவசியம்.

சுற்றுச்சூழல் கவலைகள் இருக்குமானால், இங்கிலாந்தில் இருந்து ஐரோப்பாவுக்கான சுரங்கப்பாதை போன்ற இணைப்புத் திட்டங்களையும் செய்யலாம் என்றார் மிலிந்த.

இந்நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நிலத் தொடர்பின்போது, ராமர் சேது அல்லது தமிழ்நாட்டை மன்னார் தீவுடன் இணைக்கும் ஆதாம் பாலம் பயன்படுத்தப்படுமா? என்பது குறித்து கருத்து தெரிவிக்க உயர்ஸ்தானிகர் மறுத்துவிட்டார்.

தமிழ் பெரும்பான்மையான பகுதிகளுக்கு அதிகாரப் பகிர்வுக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்தியா வெளிப்படுத்திய கவலைகள் தொடர்பில், இரண்டு நாடுகளின் கூட்டறிக்கையில் ஏன் கூறப்படவில்லை என்ற கேள்விக்கு பதிலளித்துள்ள அவர், ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமருடன் இது தொடர்பில் கலந்துரையாடியதாக தெரிவித்துள்ளார்.

இறுதியில் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு இலங்கைக்குள்ளேயே காணப்படவேண்டும் என்று மொரகொட குறிப்பிட்டுள்ளார்.

# கோழி இறைச்சி விலைக்குறைப்புக்கு பண்ணையாளர்கள் இணக்கப்பாடு

உள்நாட்டு கோழிப்பண்ணை உரிமையாளர்கள் கோழி இறைச்சியின் விலையை குறைக்க இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவால் குறைக்க கோழிப்பண்ணை உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவுடன் நேற்று (01) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே பிரதான கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் இந்த உடன்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சோளத்துக்கு 75 ரூபா இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளதே சந்தையில் கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பதற்கு காரணம் எனவும் அதனை 25 ரூபாவாக குறைக்குமாறும் வர்த்தகர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை 100 ரூபாவினால் குறைக்க இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்த அமைச்சர், சோளத்துக்கான இறக்குமதி வரியை 25 ரூபாவாக குறைக்கும் யோசனையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு இணங்கியுள்ளார்.

ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி வீழ்ச்சியடையும் போது அதன் பயனை நுகர்வோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க கோழிப்பண்ணை தொழில்துறையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

# பாடசாலை மாணவிகளுடன் சேஷ்டை செய்கிறதா பேய்?

## பாதுக்கவில் அதிர்ச்சிச் சம்பவம்



பாதுக்க பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் பேய் ஒன்று சுற்றித் திரிவதாக மாணவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

பாடசாலையின் மாணவிகள் விளையாட்டுக் குழுவொன்றுடன் மட்டுமே இந்த பேய் காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தும் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தமது பிள்ளைகள் முறையிட்டதாக பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

ஒவ்வொரு முறையும் அந்த மாணவிகள் விளையாட்டுக்குழு விளையாடுவதற்காக மைதானத்துக்குச் சென்றபோது, வகுப்பிலிருந்து மைதானத்துக்குச் சென்றவர்களை விட ஒருவர் அதிகமாகக் கணக் கிடப்பட்டதாகவும் இந்த சம்பவங்களால் தாங்கள் அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதை யாரிடமாவது சொன்னாலும் அவர்கள் நம்ப மறுக்கிறார்கள், ஆனால் மைதானத்தில் தாம் பேயால் துன்புறுத்தப்படுவது உண்மையென பிள்ளைகள் அச்சமடைந்துள்ளதாக பெற்றோர் கூறுகிறார்கள்.

விளையாட்டு அணிக்கு பொறுப்பான ஆசிரியையும் பல தடவைகள் பேயை உணர்ந்து பயந்து கூச்சலிட்டுள்ளதாகவும் இதனால் விளையாட்டு அணியிலுள்ள மாணவிகள் அச்சமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலைமையால் பாடசாலையில் விரைவில் பிரித் பாராயணம் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்து கவனத்தில் கொள்ளப்பட்ட போதிலும், பிள்ளைகளின் மனதை தெளிவுபடுத்த விஞ்ஞான ரீதியான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் பெற்றோர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

சில தடவை குழு புகைப்படங்கள் எடுத்தபோது, அநாமதேய நபர் ஒருவரும் திடீரென புகைப்படத்தில் தோன்றியுள்ளதாக மாணவிகள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் குறித்து பாடசாலையின் ஆசிரியர்கள் சிலர் மறுப்பு தெரிவித்து, இது வெறும் வதந்தி என்றும் தங்கள் பாடசாலையில் இதுபோன்ற சம்பவம் நடக்கவில்லை என்றும் தெரிவித்தனர்.

# மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் புதிய தொழுகை மண்டபம் திறந்துவைப்பு





மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் ஐந்துவேளை தொழுகைக்காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழுகை மண்டபம் ஜூலை 30 ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இது உம்மு சவாயா பள்ளிவாசலின் நிர்வாக சபையின் தலைவர் தேசபந்து மக்கி ஹாஷிம் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களால் நிர்மாணிக்கப்பட்டது.

திறப்பு விழாவில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் செயலாளர் பாரிஸ் பஹ்மி வரவேற்புரையாற்றினார்.

உம்மு சவாயா அஜ்வாத் அல் பஸ்ஸி அரபுக் கல்லூரி அதிபர் கலீபத்துஸ் ஷாஸுலி அஹமத் சூபி மஹ்லரி மற்றும் உம்மு சவாயா தலைவர் தேசபந்து மேக்கி ஹாஷிம் ஆகியோர் உரையாற்றினார்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறை குழு தலைவர் மௌலவி எம்.பி.எம். ஹிஷாம் இந்நிகழ்வில் விசேட துஆ பிரார்த்தனை நிகழ்த்தினார்.

இவ்வைபவத்தில் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி, எஸ்.எம்.மரிக்கார், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம்.இக்பால், மேல்மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, கொழும்பு பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரஸீன், பள்ளிவாசல்களின் தலைவர்கள், அரபுக் கல்லூரி அதிபர்கள், உலமாக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஒகஸ்ட் 02ஆம் திகதி, புதன்கிழமை

# தேசிய கீத சர்ச்சையும் தமிழ் பேசும் மக்களும்!

லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் தொடக்க விழாவின் போது இலங்கையின் தேசிய கீதம் சிதைக்கப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய கீதத்தின் வரிகளை சிதைப்பது இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயலாக கருதப்படுவதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் அசோக விசேட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். சர்வதேச கவனத்தை ஈர்த்த நிகழ்வொன்றின் போது தேசிய கீதத்தின் வரிகள் சிதைக்கப்பட்டமை வருத்தமளிப்பதாக ரஞ்சித் அசோக மேலும் தெரிவித்துள்ளார்.

எல்.பி.எல் விழாவில் தேசிய கீதத்தை பாடிய பிரபல பாடகி உமாரா சின்ஹவன்ச, கீதத்தின் சில முக்கிய வார்த்தைகளை தவறாக உச்சரித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது.“

ஸ்ரீலங்கா மாதா” என்பதற்குப் பதிலாக “ஸ்ரீலங்கா மஹாதா” என்று பாடியதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் புத்த சாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவும் தன் பங்குக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

எந்தவொரு நாட்டின் தேசிய கீதமும் அந்நாட்டின் அடையாளத்தையும் கலாசாரத்தையும் பிரதிபலிப்பதால் அதை யாரும் சிதைக்க முடியாது. எனவே, தேசிய கீதம் சிதைக்கப்படும் இதுபோன்ற சம்பவங்களை மன்னிக்க முடியாது.

ஒரு தேசிய கீதத்தை ரீமிக்ஸ் செய்யவோ அல்லது ரொப் இசையாக பாடவோ முடியாது. எனவே, அண்மையில் நடந்த சம்பவத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து அமைச்சகம் ஆலோசித்து வருகிறது. மேலும், இது தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தவும் நடவடிக்கை எடுப்போம்.

மேலும், தேசிய கீதத்தைப் பாடுவதற்கு ஒரு முறையான வழிமுறை உள்ளது. அந்த பதிப்பு யூடியூபில் இருக்கிறது. இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தால் எதிர்காலத்தில் நிர்வாணமாக நின்று தேசிய கீதம் இசைக்கப்பட்டாலும் நான் ஆச்சரியப்படுவதற்கில்லை” என குறிப்பிட்டுள்ளார் அமைச்சர் விதுர.

தேசிய கீதம் பாடப்பட்ட விதம் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சை தேசப்பற்றாளர்களின் வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாக இருக்கிறது.தேசிய கீதத்தை மேற்கத்தேய பாணியில் பாடியவர் சிங்கள யுவதி. அதிலும் தேசியக்கொடியில் இருக்கும் சிங்கத்தை ஒத்த அவரின் பெயர் உமாரா சிங்ஹவன்ச. தப்பித்தவறி இதே இசையை சிறுபான்மை இனத்தவர் ஒருவர் பாடியிருந்தால் , நாட்டில் இனவாதப் பேச்சுக்கள் பொறி பறந்திருக்கும். பலர் இந்த இசைப் பாணியை விமர்சித்தாலும் மற்றுமொரு தரப்பு இந்த இசை வெறுக்கத்தக்கதல்ல என்றும் கூறியிருப்பது இங்கு கவனிக்கத்தக்கது. தேசிய கீதத்தின் இசை,ஜதி மாறியிருக்கிறதே தவிர அதன் உள்ளார்த்தம் , கருத்துகள் திரிபுபடுத்தப்படவில்லை என்பது அவர்களது வாதம்.

தேசிய கீத மெட்டு மாறியிருக்கிறது என்று கூறி தேசப்பற்றாளர்கள் படும் கவலைகள் நியாயமானவைகளாக இருந்தாலும் அதே மெட்டில் எந்தவித கருத்து ,அர்த்தப்பிழைகள் இன்றி தமிழில் தேசிய கீதம் பாட இவர்கள் மறுப்பது ஏன்? இனவாதமா அல்லது வேறெந்த காரணங்களுமா?

தேசிய கீதம் நாடொன்றுக்கு மகத்துவமானது. உன்னதமானது. அதில் எந்த மாற்றங்களுமில்லை. ஆனால் அந்த உணர்வு நாட்டின் பிரஜைகளுக்கு இயற்கையாக வரவேண்டும். ஆனால் தமிழ் பேசும் சமூகங்களுக்கு உணர்வு வருகிறதா என்பதை ஒரு தடவைக்கு இரு தடவை சிந்திக்க வேண்டியுள்ளது.

இப்போதும் கூட தேசிய கீத மெட்டு திரிபடைந்து பாடப்படும்போது அது தொடர்பில் தமிழ் பேசும் சமூகங்கள் ஆச்சரியப்படவில்லை. தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவதற்கு அனுமதி மறுக்கப்படும் வேதனையின் வெளிப்பாடாகவும் அது இருக்கலாம்.

தேசியக் கொடியை அல்லது தேசிய கீதத்தை இந்நாட்டில் வாழும் தமிழரோ முஸ்லிம்களோ என்றும் அவமதித்ததில்லை. தேசப்பற்று இருப்பதை நிரூபிக்க வேண்டிய அவசியமும் அவர்களுக்கில்லை.ஆனால் அவர்களின் உரிமைகள்,அபிலாஷைகள் மதிக்கப்படவேண்டும்.அதற்கான எண்ணம் சிங்களவர்கள் மத்தியில் வரவேண்டும். தேசிய கீதத்தை சரியான மெட்டில் பாடினாலும் நாட்டின் சிஸ்டம்,மக்களின் எண்ணங்கள் பிழையெனில் எல்லாம் பிழையாகவே இருக்கும்.





# சீர்திருத்தங்களுக்கு ஜனாதிபதி சகல மட்டங்களிலும் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டியது அவசியம்

பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதன் விளைவான அரசியல் போராட்டங்களின் உடனடி யதார்த்த நிலைவரங்களை கையாளுவதற்கான தேவை கடந்த இரு வருடங்களாக அரசியல் நலனில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. ஆனால், தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினை மற்றும் நல்லிணக்கச் செயன்முறையை தேசிய அரசியலில் முக்கிய இடத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார். அது அவ்வாறுதான் இருக்கவேண்டும்.

தீர்வு காணப்படாதிருக்கும் இனப்பிரச்சினை, பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை கையாளுவதற்கான நாட்டின் முயற்சிகள் மீது ஒரு ஆபத்தான தாக்கத்தைத் தொடர்ந்து ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் முல்லைத்தீவில் போர்க்களத்தில் அழித்தொழிக்கப்பட்டதுடன் இனப்பிரச்சினை முடிவுக்கு வந்துவிட்டது என்ற நம்பிக்கை ஆதாரமற்றது என்பது நீண்ட நாட்களுக்கு முன்னரே நிரூபிக்கப்பட்டுவிட்டது.

மத்திய மயப்படுத்தப்பட்ட அரசின் ஆதிக்கத்துக்கு எதிரான தமிழர்களின் எதிர்ப்பு பலவீனப்படுத்தப்பட்டதை அடுத்து வெளித்தலையீடுகள் பலமடைந்திருக்கின்றன.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தங்களால் திரட்டப்படுகின்ற எந்தவொரு சான்றும் சர்வதேச நியாயாதிக்கத்தின் (Universal Jurisdiction) அடிப்படையில் வழக்குத்தொடுக்க விரும்புகின்ற எந்தவொரு நாட்டுக்கும் கிடைக்கச்செய்யப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கடைசியாக நடைபெற்ற அதன் கூட்டத்தொடரில் பிரகடனம் செய்தது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மட்டத்திலான ஆராய்வில் முன்னரங்கத்தில் தொடர்ச்சியாக நிற்கும் எந்தவொரு நாட்டினதும் நேர்மறையான படிமம் வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கு நிச்சயமாக இடையூறாகவே இருக்கும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் இலங்கை அரசுக்கு எதிரான அறிவுறுத்தல்கள் இறுக்கமடைந்து கொண்டுபோவதையே காணக்கூடியதாக இருக்கிறது. தேசிய நல்லிணக்க செயன்முறையில் வெற்றிகாணப்படுமேயானால், நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவரும் முயற்சிகளில் ஒரு உத்வேகம் பிறக்கும்.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வகுப்பது குறித்து ஆராய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளையும் அழைத்தார். அந்த அழைப்பை பெரும்பாலான கட்சிகள் ஏற்றுக்கொண்டன.

சர்வகட்சி மகாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி இந்த விவகாரத்தில் எடுக்கப்படக்கூடிய எந்தவொரு தீர்மானமும் சம்பந்தப்பட்ட சகல கட்சிகளினதும் கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை கையாளுவதற்கு புதிய சட்டங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரம் தனக்கோ அல்லது தனக்கு முன்னர் பதவியில் இருந்த ஏழு ஜனாதிபதிகளுக்கோ இருக்கவில்லை என்றும் அவ்வாறு செய்யும் அதிகாரம் முற்றுமுழுதாக பாராளுமன்றத்துக்கு மாத்திரமே இருக்கிறது என்றும் அவர் கூறினார். ஆனால், மகாநாட்டில் பங்கேற்ற கட்சிகள் வெளியிட்ட கருத்துக்கள் அரசியல் முறைமை (Political system ) முழுவதும் அவநம்பிக்கை பரவிக்கிடக்கிறது என்பதை பிரதிபலித்தன.

சகல தரப்புகளிலும் உள்ள அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளிலும் உட்கிடையாக அரசியல் சுயநலனும் அதிகார வேட்கையும் இருக்கின்றன என்று ஒரு நம்பிக்கை உண்டு. அரசாங்கத்தின் நடத்தை இந்த அவநம்பிக்கையை இல்லாமல் செய்ய உதவவில்லை.

### தேர்தல்கள் ஒத்திவைப்பு

மாகாண சபைத் தேர்தல்களுக்கு முன்னுரிமை கொடுத்து சர்வகட்சி மகாநாட்டில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த வாதங்கள் இரு அடிப்படைகளில் பெறுமதியானவையாக இருக்கின்றன.

முதலாவது மாகாண சபைகளில் எந்தவொரு சீர்திருத்தத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கு மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபைகள் அவசியமாகும். இரண்டாவது தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கக்கூடிய மக்கள் ஆணையின் சந்தேகத்துக்கிடமான தன்மையாகும்.

“அறகலய'' காலப்பகுதியில் அன்றைய ஜனாதிபதியையும் பிரதமரையும் அமைச்சரவையையும் பதவிவிலக நிர்ப்பந்தித்த மக்கள் கிளர்ச்சி,அரசாங்கம் முன்னர் அனுபவித்த மக்கள் ஆணையை செல்லுபடியானதாக்குவதற்கு புதிய தேர்தல் ஒன்றை அவசியப்படுத்தியது. ஆனால் அதற்கு பதிலாக பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் அரசியலமைப்பின் பிரகாரம் புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவுசெய்தனர்.

பாதுகாப்புப் படைகளைப் பயன்படுத்தி போராட்ட இயக்கத்தை ஒடுக்குவதற்கு புதிய ஜனாதிபதியிடம் அரசியல் சாதுரியமும் துணிவாற்றலும் இருந்தது. ஆனால், ஆணை தொடர்பான கேள்வி தொடரவே செய்கிறது.

மக்கள் தங்களது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு கிரமமாக தேர்தல்களை நடத்துவது ஜனநாயக அரசியல் சமுதாயமொன்றின் அடிப்படை அம்சமாகும். இது விடயத்தில் இலங்கை குறைபாடுகளுடைய ஒரு ஜனநாயகமாகப் போய்விட்டது.

அரசாங்க நிருவாகத்தின் இரண்டாவது, மூன்றாவது அடுக்குகளுக்கு தேர்தல்கள் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றன. மாகாண சபைத் தேர்தல்கள் நான்கு வருடங்களுக்கும் மேலாக நடத்தப்படவில்லை.உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஐந்து மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டிருக்கவேண்டும்.

ஜனாதிபதியினால் உத்தேசிக்கப்படுகின்றவாறு மாகாண சபைகளின் அதிகாரங்களை மேம்படுத்துவதற்கு முன்னதாக அவற்றுக்கு தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொண்ட பெரும்பாலான கட்சிகள் கோரிக்கை விடுத்தன. மாகாண சபைகளை வலுவூட்டுவதற்கு அவை நடைமுறையில் இருக்கவேண்டியது அவசியம். மாகாண சபைகளுக்கு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் அதிகாரப்பகிர்வு ஏற்பாடுகளில் அடையாளம் காணப்படக்கூடிய போதாமைகளையும் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுவதற்கு பெருமளவுக்கு நியாயப்பாட்டையும் அறிவையும் கொண்டிருப்பார்கள்.

இத்தகைய பின்னணியில், இந்த நேரத்தில் தேர்தல்களை நடத்தவேண்டிய தேவை முன்னுரிமைக்குரியது என்று நல்லெண்ணமுடைய மக்கள் கருதுவது நியாயமானதேயாகும். மாகாண சபைத் தேர்தல்களை நடத்தவேண்டும் என்று சர்வகட்சி மகாநாட்டில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு ஜனாதிபதி மகாநாட்டை இடைநடுவில் முடித்துக்கொண்டு வெளியேறி தனது பிரதிபலிப்பை வெளிக்காட்டினார். அவரது செயல் அந்த வேண்டுகோளை அவர் நிராகரித்ததன் விளைவா அல்லது இந்த விவகாரத்தில் தனது நிலைப்பாட்டையும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் மறுபரிசீலனை செய்யப்போகிறாரா என்பது அடுத்தவரும் நாட்களில் தெளிவாகும்.

ஜனநாயக அடிப்படையில் நோக்கும்போது தேர்தல்களை ஒத்திவைப்பது என்பது நியாயப்படுத்தமுடியாததாகும். தேர்தல் போட்டியொன்றில் மக்கள் செல்வாக்கை பெரிதாக வெளிப்படுத்துவது சாத்தியமில்லை என்ற அரசாங்கத்தின் கணிப்பீட்டின் அடிப்படையில் தேர்தல்களை ஒத்திவைப்பது ஜனநாயக நியமங்களைச் சீரழிக்கும் செயலாகும்.

2024 தேர்தல்கள் வருடமாக இருக்கும் என்று கூறிய ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன அந்த வேளையில் எதிர்க்கட்சியில் உள்ள உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணைவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டிருக்கிறார்.

### இப்போதே தொடங்கவேண்டும்

இந்த சூழ்நிலைகளில் தேர்தல்களை சாத்தியமானளவு நீண்டகாலத்துக்கு ஒத்திவைக்க அரசாங்கம் விரும்பக்கூடும். இது குறைந்தபட்சம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டியிருக்கும் 2024 செப்டெம்பர் வரை நீடிக்கக்கூடும். ஆனால், ஜனாதிபதியின் நேர அட்டவணைக்கு பொருந்தக்கூடிய வகையில் தேர்தல்களை ஒத்திவைப்பது ஒரு ஜனநாயக சீரழிவாக அமையும்.

தேர்தல்களை ஒத்திவைக்கும் இத்தகைய பாதகமான கைங்கரியங்கள் இலங்கைக்கு ஒன்றும் புதியவையல்ல.1975 ஆம் ஆண்டு அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை நாடு கண்டது. தன்னால் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைப்பு பதவியில் இருப்பதற்கு மேலதிகமாக இரு வருடங்களை தந்திருப்பதாக கூறி அன்றைய அரசாங்கம் தேர்தலை பிற்போட்டது. தேர்தல் நடந்தபோது அந்த அரசாங்கம் படுமோசமாக தோற்கடிக்கப்பட்டது.

இன்னொரு சந்தர்ப்பத்தில் உரிய நேரத்தில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு பதிலாக அரசாங்கம் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தியது. அதற்கு பிறகு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான 1983 கறுப்பு ஜூலை இனவன்செயல்கள் மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போருக்கு வழிவகுத்தன.

நாட்டின் எதிர்காலத்துக்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கு எதுவாக இருந்தாலும் அவர் ஜனநாயக செயன்முறைகளுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டியது அவசியமாகும். இதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களும் மாகாண சபை தேர்தல்களும் விரைவாக நடத்தப்படவேண்டும்.

ஜனாதிபதியின் பங்களிப்பின் பெறுமதியும் நம்பகத்தன்மையும் அந்த தேர்தல்களில் அரசாங்கம் வெற்றிபெறுகிறதோ தோல்வியடைகிறதோ என்பதில் அவர் எடுக்கக்கூடிய தீர்மானத்தின் நேர்மையில்தான் தங்கியிருக்கிறது. ஜனநாயக நியமங்களை பின்பற்றுவதில் அவர் காட்டக்கூடிய உறுதிப்பாடு அரசியல் சமுதாயத்துக்கு அவர் மீதும் அவரின் உறுதிமொழிகள் மீதும் நம்பிக்கையைப் பெருக்கும்.

நாட்டை சரியான தடத்தில் பயணம் செய்யவைப்பதற்கு தேவையான பொருளாதார சீர்திருத்தச் செயன்முறையை ஜனாதிபதி தொடங்கியிருக்கிறார். அதே போன்றே சுதந்திரம் பெற்ற காலத்தில் இருந்து நாட்டை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவரும் இனப்பிரச்சினை விடயத்திலும் நடந்துகொள்ள அவர் விரும்புகிறார் போன்று தெரிகிறது.

இந்த இரு குறிக்கோள்களையும் அடைவதற்கு அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தவேண்டிய 2024 செப்டெம்பர் வரை ஜனாதிபதிக்கு கால அவகாசம் இருக்கிறது.அரசியலமைப்பில் உள்ளவாறு 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவையை கடந்த ஆறு மாத காலத்தில் செய்த பல அறிவிப்புக்களில் ஜனாதிபதி வலியுறுத்திக்கூறி வந்திருக்கிறார். தனக்கு முன்னர் பதவியில் இருந்த ஏழு ஜனாதிபதிகளும் செய்யத் தவறியதை விக்கிரமசிங்க செய்துகாட்டவேண்டிய தேவை இருக்கிறது.

அதாவது பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்கம் செய்வது தொடர்பில் அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தவேண்டும்.

13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை கல்விமான்கள், சமூகத்தலைவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் வழிநடத்தலின் கீழான அறிவூட்டல் செயன்முறையொன்றில் இருந்து தொடங்கலாம்.

மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரப்பரவலாக்கத்தைச் செய்தாலும் கூட பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தின் இறுதி அதிகாரத்தின் கீழ் எவ்வாறு இருக்கும் என்பதை கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் தனது அண்மைய கட்டுரைகளில் தெளிவாக விளக்கியிருக்கிறார். அவர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுக்குழுவின் உறுப்பினராக இருந்தவர்.

நம்பிக்கைப் பற்றாக்குறையே இலங்கையில் உள்ள பிரச்சினையாகும். அது சர்வ வியாபகமாக இருக்கிறது. அதை வெற்றிகொள்வதற்கு நம்பிக்கை வைக்கக்கூடிய தலைமைத்துவம் அவசியம்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## இன்றைய நாளில்...

- ✱ 1858 – இந்தியாவில் கம்பனி ஆட்சி முடிவுக்கு வந்து பிரித்தானிய அரச ஆட்சி நடைமுறைக்கு வந்தது.
- ✱ 1918 – கனேடிய வரலாற்றில் முதல் தடவையாக பொது வேலைநிறுத்தம் வான்கூவர் நகரில் இடம்பெற்றது.
- ✱ 1922 – சீனக் குடியரசைத் தாக்கிய சூறாவளியில் 50,000 பேர் வரை உயிரிழந்தனர்.
- ✱ 1932 – பசிட்ரன் (இலத்திரனின் எதிர்மின்னி) கார்ல் எண்டர்சன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- ✱ 1934 – ஹிட்லர் ஜேர்மனியின் அரசுத்தலைவரானார்.
- ✱ 1989 – பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பில் மீண்டும் இணைந்தது.
- ✱ 1989 – 1989 வல்வெட்டித்துறைப் படுகொலைகள்: யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 63 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
- ✱ 1990 – ஈராக் குவைத்தின் மீது படையெடுத்தது. வளைகுடாப் போர் ஆரம்பமானது.
- ✱ 1994 – பலாலி இராணுவத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கியதில் உலங்கு வானூர்தி, கவச வண்டி தாக்கியழிக்கப்பட்டன.
- ✱ 2006 – திருகோணமலை மாவட்டத்தில் மஹிந்தபுர, கிளிவெட்டி, பாலதோப்பு, பச்சனூர் இராணுவ முகாம்களைத் தாக்கி மூதூர் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நுழைந்தனர்.

## நக்கல் நமசிவாயம்



# அமைச்சரவைத் தீர்மானங்கள்




**1 12 20**
**அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் பணிகளை வினைத்திறனாக்கலும் முறைமைப்படுத்தலும்**

திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமித்தல் கோரளைப்பற்று அடிப்படையில், நகரப் பிரிவு மட்டத்திலும், மருத்துவமனை மட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டிருப்பதால் குறித்த அதிகாரப்பரப்பினுள் எல்லைகளை திட்டவட்டமாக அறிந்துகொள்வதற்கு இயலாமையால் திடீர் மரண விசாரணை அதிகாரிகளின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்போது பொதுமக்களுக்குப் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. அத்துடன், நீண்டகாலமாக திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான நியமனம் வழங்கப்படாமை, ஒருசில மாவட்டங்களில் அதிக வெற்றிடங்கள் காணப்படுவதால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறனானதும், முறைசார்ந்த வகையிலான சேவைகளை வழங்கும் நோக்கிலும் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கான தகைமைகள், அவர்களின் பொறுப்புகள் மற்றும் பணிகள் உள்ளடங்கிய ஏற்பாடுகளைத் தெளிவாகக் குறிப்பிட்டு கடமை நிரந்தர செயன்முறைக் கோவையொன்று நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சால் தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த பணிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய தற்போது நியமிக்கப்பட்டுள்ள அனைத்து திடீர் மரண விசாரணை அதிகாரிகளும் பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அடையாளங் காணப்பட்டுள்ள மருத்துவமனைகளுக்கு இணைப்புச் செய்வதற்கும் இருமொழிப் பயன்பாட்டு பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக இருமொழி திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிப்பதற்கும் தொடர்ந்து நிலவுகின்ற வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காகப் புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காகவும் இவ்வமைச்சு திட்டமிட்டுள்ள தொடர் வேலைத்திட்டங்களை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்துள்ளார். குறித்த வேலைத்திட்டத்திற்கு அமைச்சரவையின் உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**02. கிங்கங்கை நீரால் தொடர்ந்து மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தடுப்பதற்காக கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்**

கிங்கங்கை நீரால் தொடர்ந்து மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைத் தடுப்பதற்கு நிரந்தரத் தீர்வொன்றை வழங்குவதற்கு இயலுமாகும் வகையில் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான சாத்தியவளக் கற்கையை மேற்கொள்வதற்காக MCC – Sinohydro Consortium நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மதுசாரம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் மேலதிக சுகாதார வைத்திய அதிகாரி போன்ற பதவிகளை அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களாக நியமிப்பதற்கு இயலுமாகும் வகையில் 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க மதுசாரம் மற்றும் புகையிலை மீதான தேசிய அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. இந்தியாவின் கொச்சி சர்வதேச விமான நிலையம் மற்றும் இந்தோனேஷியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் ஸ்ரீலங்கன் விமானக் கம்பனியின் விமானங்களுக்கான சேவைகளைப் பெறல்**

ஸ்ரீலங்கன் விமான கம்பனியால் இந்தியாவின் கொச்சி மற்றும் இந்தோனேஷியாவின் ஜகார்த்தா சர்வதேச விமான நிலையங்களில் விமானப் பயணிகள் மற்றும் நடமாடும் விமான மற்றும் பொருட்களை ஏற்றி இறக்கல்கள் போன்ற பிரிவுகளுக்காக சேவை வழங்குநர்களைத் தெரிவுசெய்வதற்கான விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய கொச்சி சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கல் ஒப்பந்தத்தை AI Airport Services Limited இற்கும், ஜகார்த்தா சர்வதேச விமான நிலையத்தில் சேவை வழங்கும் ஒப்பந்தம் PT. Gapura Angkasa இற்கும் வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

அஸ்வெசும சமூக நலன்புரி நன்மைகள் வேலைத்திட்டத்தின் கீழ் துரிதமாக நன்மைகளை செலுத்துவதற்கு ஏற்புடைய வகையில் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் வேலைத்திட்டத்திற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

நலன்புரி நன்மைகள் சபையால் அஸ்வெசும வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப சுற்றில் பயனாளிகள் 17,92,265 பேரைத் தெரிவு செய்துள்ளதுடன், அவர்களில் மேன்முறையீடு அல்லது ஆட்சேபனை கிடைக்கப்பெறாத பயனாளிகள் 15,88,835 பேருக்காக கொடுப்பனவுகளைச் செலுத்துதல்.

பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு, ஆனாலும் மேற்படி வகைகளில் உள்ளடக்கப்படுவதற்காக மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்துள்ள பயனாளிகள் 84,374 பேருக்கு அவர்களுடைய மேன்முறையீடுகளை மீளாய்வு செய்து இறுதித் தீர்மானத்தை வழங்கும் வரைக்கும் அவர்கள் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள வகைக்குரிய நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல.

தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளில் 1,19,056 பேருக்கு எதிராக ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த ஆட்சேபனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்ற மீளாய்வுச் செயன்முறை நிறைவு பெறும் வரைக்கும் அவர்களுக்குரிய நன்மைகளைச் செலுத்துதல்.

வேலைத்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளுக்காக விண்ணப்பித்து ஆனாலும் தெரிவு செய்யப்படாத தற்போது சமுர்த்தி நலன்புரி நன்மைகளைப் பெறுகின்ற 3,93,097 பேருக்கு அஸ்வெசும வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேபனை மற்றும் மேன்முறையீட்டு செயன்முறை முழுமையாக நிறைவு பெறும் வரைக்கும் அவர்களுக்கு சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளைச் செலுத்துதல்

தற்போது சிறுநீரக உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பயனாளிகளுக்குப் பிரதேச செயலகத்தின் ஊடாக தொடர்ந்தும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் முதியோருக்கான உதவிக் கொடுப்பனவுகளை அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக தொடர்ந்தும் வழங்குதல்.

பராமரிப்பு இல்லங்கள் அல்லது வணக்கத்தலங்களிலுள்ள சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள், இயலாமையுடன் கூடிய நபர்கள் அல்லது முதியோர்கள் 11,660 பேருக்கு குறித்த உதவிக் கொடுப்பனவுகளைத் தொடர்ந்தும் செலுத்துதல்.

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.




யாழ்ப்பாணம் - வடமராட்சி, புலோலி வட மேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சன சமூக நிலையத்தின் 68 ஆவது ஆண்டை முன்னிட்டு குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு நேற்று சிறப்பாக இடம்பெற்றது. அறிவகம் சன சமூக நிலையத்தின் தலைவர் தங்கராசா அரவிந்தன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் மருத்துவர் குழு குருதியை பெற்றுக்கொண்டது.

# சாவகச்சேரி கல்வயல் பகுதியில் வீடு புகுந்து நகை,பணம் திருட்டு

*சாவகச்சேரி நிருபர்*

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் கிராமத்தில் அமைந்துள்ள வீடொன்றில் 31/07 திங்கட்கிழமை பிற்பகல் திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வேலைக்குச் சென்றிருந்த நிலையில், அவரது மனைவி அருகிலுள்ள காணிக்கு ஆடு கட்டச் சென்ற போது அதனை அவதானித்து வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் ஒன்றரைப் பவுண் நகை மற்றும் கட்டட நிர்மாணப் பொருட்கள் வாங்க வைத்திருந்த இரண்டு இலட்சத்து 15ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைத் திருடிக்கொண்டு தப்பிச்சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பான சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வவுனியா தோணிக்கல் தாக்குதல் சம்பவம்! ஐவர் கைது - ஏனையோரைத் தேடி விசாரணை

வவுனியா தோணிக்கல் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா - தோணிக்கல் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை புகுந்த குழுவொன்று வீட்டு உரிமையாளர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன், பெற்றோலை ஊற்றி வீட்டுக்கு தீயிட்டனர்.

இச்சம்பவத்தில் மூச்சுத்திணறல் காரணமாக வீட்டிலிருந்த பாத்திமா சமீமா என்ற 21 வயது இளம்குடும்பப் பெண் சம்பவ இடத்திலேயே மரணமடைந்ததுடன்,மேலும் 10 பேர் காயமடைந்தநிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அதில் கடுமையான எரிகாயங்களுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த இறந்த பெண்ணின் கணவனான ச.சுகந்தன் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் இராசாயன பகுப்பாய்வாளர்கள், தடயவியல் நிபுணர்களின் உதவியுடன் வவுனியா பிரிவுப் பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்துவந்ததுடன். இச்சம்பவம் தொடர்பில் பலரிடம் வாக்கு மூலங்களும் பெறப்பட்டிருந்தன.

விசாரணைகளின் அடிப்படையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஐந்து பேரை வவுனியா பிரிவிற்கான குற்றத்தடுப்புப் பொலிஸார் நேற்று மாலை கைதுசெய்துள்ளனர்.

வவுனியா நாலாம்கட்டையைச் சேர்ந்த சிவானந்தராசா ஜெயசீலன் வயது 27, கற்பகபுரத்தை சேர்ந்த சுப்பிரமணியம் நந்தநாதன் வயது32, சிவபுரத்தைச் சேர்ந்த யீவதாஸ் சயந்தன் வயது 33, நெளுக்குளத்தைச் சேர்ந்த தேவகுமார் யசுதன் வயது 24, தவசிகுளத்தை சேர்ந்த பாலகுமார் நிருபன் வயது 27 ஆகிய நபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, குற்றச்செயலுக்கு உதவியதாகத் தெரிவிக்கப்படும் 3 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் வவுனியாவைச் சேர்ந்த ஏனைய மூவர் வெளிநாடுகளிற்கு தப்பிச்செல்ல முடியாதவாறு அவர்களது கடவுச்சீட்டுகள் பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இருதரப்புகளுக்குமிடையிலான தனிப்பட்ட முன்பகையே குறித்த சம்பவத்திற்கு காரணம் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நீதிமன்ற அனுமதியுடன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யுவதி கொடூரமாக வெட்டிக்கொலை: முன்னாள் காதலனின் வெறியாட்டம்

கம்பஹா மாவட்டத்தில் யுவதி ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கம்பஹா - மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (31.07.2023) மாலை இடம்பெற்றுள்ளது.

மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய ஆர்.ஷிராந்தி என்ற யுவதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

ஷிராந்தியின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் கத்தியுடன் சென்ற 26 வயதுடைய இளைஞர், அவரைச் சரமாரியாக வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

குறித்த இளைஞர் ஷிராந்தியின் முன்னாள் காதலன் என பொலிஸ் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

# தெமட்டகொடை கைரிய்யாவில் சின்னம் சூட்டும் நிகழ்வு

கொழும்பு,தெமட்டகொடை கைரிய்யா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் சிரேஷ்ட,கனிஷ்ட பிரிவு மாணவத் தலைவிகளுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு நாளை (03) வியாழக்கிழமை நடைபெறும்.

கல்லூரி அதிபர் நஸீரா ஹஸனார் தலைமையில் கல்லூரியின் ஷாம் ரியாய் ஹாஜியார் கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பீ.ஆர்.தேவபந்து,கல்லூரியின் உப,பிரதி அதிபர்கள்,ஆசிரியைகள்,மாணவிகள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றவர் வடிகானில் சடலமாக மீட்பு

## களுத்துறையில் சம்பவம்

களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்ற நபரொருவர் நேற்று செவ்வாய்க்கிழமை (1) காலை வடிகானிலிருந்து சடலமாக மீட்கப்பட்டதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் 70 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (31) அல்லது அதற்கு முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை (30) வெளிநோயாளர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு சென்றிருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கெப் வாகனத்தில் இளைஞர் கடத்தல் அவிசாவளையில் மூவர் கைது

கெப் வாகனத்தில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று தடுத்து வைத்து கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில் பெண் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அவிசாவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய கெப் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடத்தல் சம்பவத்துக்கு உதவிய குற்றத்துக்காக மூவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக கடந்த 24ஆம் திகதி இளைஞர் ஒருவர் கெப் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு கொலைமிரட்டல் விடுக்கப்பட்டதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட. விசாரணையில் மூவரும் கைதுசெய்யப்பட்டனர்.

# தெருநாய்களின் தொல்லை அதிகரிப்பு சிறார்கள் – பாதசாரிகள் கடும் சங்கடம்

உக்குவளை நகரிலும் அதனையடுத்த கிராமங்களிலும் தெருநாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதைக் காணமுடிகிறது. இத்தெருநாய்களால் பாதசாரிகள் மற்றும் பாடசாலைச் சிறார்கள் கடும் சங்கடத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இவற்றுள் விசர்நாய்களும் இருப்பதுடன் இந்நாய்கள் இதுவரை பாதைகளில் சென்ற இரு பாடசாலைச் சிறார்கள் உட்பட ஏழு பேரைக் கடித்திருப்பதாகவும் அவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் செல்வதுடன் இருவர் தங்கி சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பிரதேசவாசிகள் பாதைகளில் செல்வதற்கு கடும் சங்கடப்படும் – சிரமப்படும் நிலையுமேற்பட்டுள்ளது.

டெங்கு கண்காணிப்பு மற்றும் ஒழிப்பு பணிகளிலும் ஈடுபட்டுவரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இத்தெருநாய்கள் மற்றும் குறிப்பாக, விசர்நாய்கள் விடயத்திலும் அதிக கவனம் செலுத்துமாறு பிரதேச வாசிகள் வேண்டுகின்றனர். இல்லையேல், வைத்தியசாலைகளில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படும் இச்சந்தர்ப்பத்தில் விசர்நாய்களினதும் பெருக்கத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டிவருமெனவும் தெரிவிக்கின்றனர்.

# உடப்பில் தீ மிதிப்பு இன்று

*உடப்பு நிருபர்*

வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் தீமிதிப்பாகிய பூமிதிப்பு இன்று புதன்கிழமை (2) திகதி நடைபெறும்.

கடந்த 16ஆம் திகதி ஆலயத்தில் உட்கொடியேற்றம் ஆரம்பமாகி பதினெட்டு தினங்கள் உற்சவம் நடைபெற்று வருகிறது. இன்று காலை பூசகர் குழந்தைவேல் சுரேந்திரனால் சூடச்சட்டி ஏந்தி உள்வீதி - வெளிவீதி வந்தவுடன் ஆலயத்தின் முன் பிரதான தீமிதிப்புக்காக தயார் செய்யப்பட்ட தீக்கிடங்கில் காலை 6மணிக்கு செந்தணல் மூட்டப்படும்.

பின்னர் பெருந்தொகையான புளியங்கட்டைகள் அடுக்கப்பட்டு தீ மூட்டப்படும். இரவு 8.30 மணியளவில் தீமிதிப்பு நடைபெறும். மக்களின் நன்மைக்காக இந்து ஆலய பரிபாலன சபையினரால் சிலாபத்திலிருந்து உடப்புக்கு விஷேட போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
திங்கட்கிழமை 2023.07.31
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5192 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ- 27,884,336.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 2 7 0 4 2 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3434 — சீட்டிழுப்பு திகதி 2023.07.31 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,031,025.20
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 06 41 43 46 — விசேட எழுத்து X — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 48630

Lucky 7 லக்கி — திகதி 31.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0018
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 0 0 5 4 7 9 — L7 இலக்கம் 1 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,332,757.84

தன நிதானய — திகதி 2023/07/31 — சீட்டிழுப்பு இலக்கம் 1222 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,672,960.80
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 18 34 50 82 — விசேட எழுத்து S
Double Chance இலக்கம் 28136

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 501 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,085,367.80
வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 05 09 25 31 — விசேட இலக்கினம் சிம்மம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1540 — 31/07/2023 — 17996 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,806,848.00
ஆங்கில எழுத்து F — சுப்பர் இலக்கம் 18 — வெற்றி இலக்கங்கள் 12 25 51 70
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகளின் நினைவேந்தல் நாளாக ஜூலை 25ஆம் திகதி பிரகடனம்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு அறிவிப்பு

யாழ். நிருபர்

ஜூலை 25ஆம் திகதியை உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் தினமாக பிரகடனம் செய்வதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பு அறிவித்துள்ளது.

சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சாவைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நிகழ்வு குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (31) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், குருநகர் புதுமை மாதா தேவாலயத்துக்கருகாமையிலுள்ள குரலற்றவர்களின் குரல் பணியிடத்தில் குறித்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதுதொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் சாவைத் தழுவிய தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கையும் காரணங்களும் காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றின் கீழ் சந்தேகத்தின்பேரில் பால், வயது வேறுபாடின்றி ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு , இனத்தின்பேரில் வஞ்சிக்கப்பட்டு சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சிறைகளில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளுள் நூற்றுக்கணக்கானவர்கள் திட்டமிடப்பட்ட சிறைக்கலவரங்களாலும் நோய்வாய்ப்பட்ட நிலையில் போதிய மருத்துவ பராமரிப்பின்றியும் சிறையின் நான்கு சுவர்களுக்குள்ளேயே நீதியின்றி பரிதாபகரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

1983ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட ஜூலை கலவரத்தின்போது, வெலிக்கடைச் சிறையின் அதியுயர் பாதுகாப்புப் பிரிவுக்குள் தடுத்துவைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட்ட 54 தமிழ் அரசியல் கைதிகள் அரசின் கைக்கூலிகளால் சிறைக் கொட்டகைகளுக்குள்ளேயே கதறக் கதற கொன்றொழிக்கப்பட்டார்கள்.

அதேபோன்று, 1987இல் பூஸா தடுப்புமுகாமில் 9 தமிழ் அரசியல் கைதிகளும் 1997இல் களுத்துறைச் சிறையில் 5 தமிழ் அரசியல் கைதிகளும் கொடூரமாக சாகடிக்கப்பட்டார்கள்.

2001 ஆம் ஆண்டில் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம்மீது இனவெறிகொண்ட காடையர்கள் நடத்திய மிருகத்தனமான தாக்குதலில் 27 தமிழ் அரசியல் கைதிகள் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்யப்பட்டார்கள்.



2012இல் வவுனியா சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகள் சிறையதிகாரிகளாலும் விசேட அதிரடிப்படையினராலும் அடித்துக் கொலைசெய்யப்பட்டனர்.

இவைமட்டுமல்ல, யுத்த காலங்களில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள், நீண்டநெடுங்காலமாக கொழும்பு புதிய மெகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களுள் பலர் உடல் - உளத் தாக்கங்களாலும் போதிய மருத்துவம் மற்றும் போஷாக்கான உணவின்மையாலும் நோய் நொடிகளுக்கு ஆளாகி சிறைக்குள் சாவடையும் பெருந்துயரம் அண்மைக்காலம்வரை இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

இவ்வாறு நீண்டுசெல்கின்ற சிறைக்கொடுமைகளின் பட்டியலில், அங்க இழப்புகளுடனும் விழுப்புண்களுடனும் தப்பிப் பிழைத்து, இப்பூமிப் பந்தின் எங்கோர் மூலையில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எவ்வாறாயினும், ஓர் இனச் சமூகத்தின்பேரில் சிறையிலடைக்கப்பட்டு வஞ்சகமாகக் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் நினைவுகூரப்பட்டு தமிழர் எம் வரலாற்று ஆவணங்களில் இவர்களது சம்பவங்களும் சாவுகளும் சான்றாதாரங்களாக பொறிக்கப்படவேண்டும்.

அந்தவகையில், குரலற்றவர்களின் குரல் அமைப்பானது, ஆண்டுதோறும் வருகின்ற ஜூலை 25ஆம் திகதியை உயிர்க்கொடையளித்த தமிழ் அரசியல் கைதிகள் நினைவேந்தல் நாள் எனப் பிரகடனம் செய்து அதற்கான பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது என்றுள்ளது.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

# சுகாதாரத்துறையின் முறைமைகளை மீளாய்வுக்குட்படுத்த ஆளுநர் பணிப்பு



யாழ். நிருபர்

வட மாகாண சுகாதார சேவைகள் துறையை மீளாய்வுக்குட்படுத்தி வினைத்திறனுடன் செயற்பட வைக்குமாறு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பணித்துள்ளார்.

வட மாகாணத்தில் சுகாதாரத் துறை முறைமைகள் பற்றிய கரிசனைகள் தொடர்பில் வட மாகாண ஆளுநரின் தலைமையில் வட மாகாண பிரதம செயலாளர், சுகாதார அமைச்சு செயலாளர், மாகாண சுகாதாரப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம்(31) திங்கட்கிழமை கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்போது, சேவை நாடுவோருக்கான சிகிச்சை, முகாமை மற்றும் புனர்வாழ்வு என்ற விடயங்கள் சுகாதார சேவை நிலையங்களில் ஓரேவிதமாக நோக்கப்படலாகாது என்றும் அவை வெவ்வேறான முறைமைகள் ஊடாக அணுகவேண்டியவை என்பதையும் வலியுறுத்துவதாக ஆளுநர் தெரிவித்தார்.

வைத்தியர்களின் விடுப்பு நேர பதிலீடு, உணவுப் பாதுகாப்பு, வெளிநோயாளிகள் முறையாக மருந்துகளைப் பெற்றுக்கொண்டு அதனை கிரமமாக உபயோகிப்பதற்கான கண்காணிப்பு, அவசர அம்பியூலன்ஸ்களின் பராமரிப்பு, சுகாதார சேவைப் பணிமனைகளின் ஊடாக வழங்கப்படும் சேவைகள், உள்ளூராட்சி மன்ற சேவைகளில் சுகாதார சேவை பணிமனைகளின் காத்திரமான ஈடுபாடு என்பன எவ்வளவு வினைத்திறனாக நடைபெறுகின்றன என்பது பற்றியும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களிடம் ஆளுநர் கேட்டறிந்ததுடன், அந்த முறைமைகளை அடிக்கடி மீளாய்வுக்குட்படுத்தி, பொதுமக்களுக்கான சேவைகளை வினைத்திறனாக வழங்க வேண்டும்.

வடமாகாண பிரதம செயலாளர் தூர மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமனம் செய்ய நடவடிக்கைகள் படிப்படியாக எடுக்கப்படும் என்றார்.

பாடசாலைகளில் சுகாதார நிலைமைகள் பற்றி கேட்டறிந்த ஆளுநர், அதிகாரிகள் பாடசாலைகளில் குடிநீர், சுகாதாரம், சுத்தம், ஆரோக்கியம் என்பவற்றில் அதிக கரிசனை கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு இன்றைய போட்டிக்கல்வி முறை உளவியல் ரீதியான பாதிப்புகளை உருவாக்குவது பற்றியும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பிள்ளைகளின் ஆரோக்கியம் தொடர்பாக அறிந்துகொள்வதற்குரிய முறைமைகளை உருவாக்க வேண்டும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

பொதுமக்களின் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு வெவ்வேறு துறையினரும் இணைந்து செயற்பட்டு தீர்வுகளைக் காணவேண்டியதன் அவசியத்தையும் ஆளுநர் எடுத்துரைத்தார்.

# செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் 16ஆம் திகதி ஆரம்பம்

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி பிற்பகல் 03 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மஹோற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 30ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 31ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

இந்நிலையில், ஆலய மஹோற்சவ திருவிழா ஏற்பாடுகள் தொடர்பில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வார்ப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் பிரதேச செயலர் ஊடகங்களுக்கு செய்திக் குறிப்பை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த செய்திக் குறிப்பில்,

மஹோற்சவ காலத்தில் ஆலயச்சூழலில் ஒருவழிப்பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன், போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதைத் தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்துக்குச் செல்ல முடியும்.

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகள் நடமாட்டம் காணப்படுவதால் ஆற்றில் இறங்குவதைத் தவிர்க்க வேண்டும்.




ஆலய பூசைகளின்போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாகப் பின்பற்றத் தவறும்பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கும் தற்காலிக கடைகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் காணிகளில் அமைந்திருக்கும் நிரந்தரக் கடைகளுக்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன், புதிய கடைகளுக்கும் மற்றும் வீதியோரக் கடைகளுக்கும் ஆலய வீதியில் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

ஆலய மஹோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டி இருப்பின் அவ்வுரிமையாளர் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடத்திய அனுபவம் மற்றும் மருத்துவ சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

உணவு நிலையங்களில் உணவை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் என அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

உணவு நிலையங்களுக்கான குடிநீர் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அனுமதிக்கப்பட்ட இடத்திலிருந்து பெறப்பட வேண்டும். ஆலய ஒலிபெருக்கி பாவனை தவிர, வேறு ஒலிபெருக்கி பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொருட்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேர்த்திருவிழா அன்று தேர் வீதியுலா வரும் சமயத்தில் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்காக அந்த நேரத்தில் ஆற்றங்கரை வீதியூடாக வாகனங்கள் உள் நுழைவதற்கு தற்காலிகமாக அனுமதி மறுக்கப்படும்.

அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்துக்கு வருகைதருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஸ் பள்ளத்தில் பாய்ந்து பதினெட்டு பேர் படுகாயம்





எஸ்.கணேசன், கினிகத்தேனை, தலவாக்கலை நிருபர்கள்

கொழும்பிலிருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை சிங்கள வித்தியாலயத்துக்கருகில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இச்சம்பவத்தில் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து நள்ளிரவு 12 மணியளவில் பயணிகளை ஏற்றிக்கொண்டு நுவரெலியா பகுதிக்குச் சென்ற குறித்த பஸ் நேற்று (01) அதிகாலை 4.40 மணியளவில் பாதையை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. பஸ்ஸில் 120 பேர் வரை பயணித்தபோதும் 18 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

பஸ்ஸில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவும் எதிர்த்திசையிலிருந்து வந்த பஸ்ஸுக்கு வழிவிட நேர்ந்ததாலும் பஸ் கட்டுப்பாட்டை இழந்து இந்த விபத்து நேர்ந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த 18 பேரும் வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதுதொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## விசேட தேவையுடையோருக்கு பிரத்தியேக நுழைவாயில்



ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி சமன் மகா தேவாலயத்தில் விசேட தேவையுடையவர்களுக்கென பிரத்தியேக நுழைவாயிலொன்று அமைக்கப்பட்டுள்ளது. சமன் தேவாலயத்தின் தியவடன நிலமே மிகார ஜயசுந்தரவின் வேண்டுகோளுக்கமைய இரத்தினபுரி சிங்க சமாஜத்தின் அனுசரணையில் இலங்கை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் இந்த நுழைவாயில் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதேவேளை தேவாலயத்தின் விளக்கேற்றும் தொகுதி புனர் நிர்மாணப் பணிகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஸ்ரீபாதஸ்தானாதிபதி ஊவவெல்லஸ்ஸ பல்கலைக்கழக துணைவேந்தர் பெங்கமுவே தம்ம தித்த தேரர், ஜனாதிபதி ஆலோசகரும் தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரத்னாயக்க, இராணுவத் தளபதி விகும் லியனகே உட்பட பௌத்த பிக்குகள், அரசியல் சமூக சேவைப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.





கண்டி, மடவளை பஸார் ஹில்கன்றி பெண்கள் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா மதீனா மத்திய கல்லூரி அஷ்ரப் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சாமிலா தாவூத் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார். **படங்கள்:** கண்டி நிருபர்

# வீதியின் நடுவே செயலிழந்த எரிபொருள் லொறியால் போக்குவரத்து பாதிப்பு

செ.திவாகரன்



நுவரெலியா பிரதான நகருக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச்சென்ற லொறி இயந்திரக் கோளாறு காரணமாக நுவரெலியா - உடப்புசல்லாவ பிரதான வீதியில் நிறுத்தப்பட்டது.

இதனால் அப்பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. இதன் காரணமாக சுமார் இரண்டு மணி நேரம் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. இதனையடுத்து வாகன திருத்துநர்கள் வரவழைக்கப்பட்டு லொறி சீரமைக்கப்பட்டது. இதனையடுத்து நுவரெலியா போக்குவரத்துப் பொலிஸாரின் உதவியுடன் போக்குவரத்து சீர் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தீ விபத்தில் பாதிப்புற்ற பெரிய ராணிவத்தை மக்களுக்கு நிவாரணம் வழங்கிவைப்பு





ஆ.ரமேஸ்

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாகசேன, பெரியராணிவத்தை தோட்ட இலக்கம் (01) லயன் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சென்று பார்வையிட்ட நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான அவசர நிவாரண உதவிகளை வழங்கி வைத்தார்.

லிந்துலை, பெரியராணிவத்தை தோட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற தீ விபத்தினால் 16 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேர் பாதிக்கப்பட்டு தோட்டத்தில் பொது இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தமது உடமைகளை இழந்து நிர்க்கதிக்குள்ளான மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை பாராளுமன்ற உறுப்பினர் நேரில் சென்று வழங்கி வைத்தார். அத்துடன், தீயினால் பாதிப்புக்குள்ளான வீடுகளைப் பார்வையிட்ட உதயகுமார் எம்.பி., சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

# உலக செய்திகள்

## தீராக் காதல்:
# நாயாக மாறிய ஜப்பான் இளைஞன்





ஜப்பானை சேர்ந்த டோகோ என்பவர் மிகப்பெரிய தொகையை செலவு செய்து தன்னை ஒரு நாயாக மாற்றிக்கொண்டுள்ளார்.

டோகோ தன்னை மனித உருவத்திலிருந்து நாயாக மாறுவதற்கு 22 ஆயிரம் யென் செலவு செய்துள்ளார்.

டோகோவுக்கு சிறு வயது முதலே நாய்கள் மீது தீராத காதல். நாயாக பிறந்திருக்கலாம் என்று அடிக்கடி நண்பர்களிடம் கூறிக்கொண்டே இருப்பாராம். திடீரென ஒரு நாள் நாயாகவே மாறி அதிர்ச்சியையும் தந்துள்ளார்.

தொலைக்காட்சி விளம்பரங்கள் மற்றும் திரைப்படங்களுக்கான ஆடைகளை உருவாக்கும் ஜப்பானிய நிறுவனமான ஜெப்பெட், டோகோவை நாயாக மாற்றியுள்ளது. இதற்கு 40 நாட்கள் ஆகியுள்ளன. தத்ரூபமாக தெரியும் சிலைகள், உடைகள், 3-டி மொடல்கள் போன்றவற்றை உருவாக்குவதில் இந்த நிறுவனம் புகழ்பெற்று விளங்குகிறது.



''டோகோ கூலி இனத்தை சேர்ந்த நாயை போல வடிவமைக்கப்பட்டுள்ளார். இது நான்கு கால்களில் நடக்கும் உண்மையான நாயின் தோற்றத்தை உருவாக்குகிறது'' என்று ஜெப்பெட் நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

அந்த நபர் தனது யூடியூப் சேனலில் முதல் முறையாக தான் நாய் உருவத்துக்கு மாறியிருக்கும் வீடியோவை வெளியிட்டுள்ளார். நான் மிருகமாக இருக்க விரும்புகிறேன் என்ற தலைப்பில் இந்த வீடியோவை பதிவேற்றியுள்ளார்.

நாயாக மாறியுள்ள டோகோ, மற்றவர்கள் கொடுக்கும் போலி மரியாதையை விரும்பாததால், தனது மனித அடையாளத்தை மறைக்க விரும்பியதாகவும் தனது வாழ்நாள் கனவு நிறைவேறிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.



# வெள்ளத்தில் மிதக்கும் சீனா

## 11 பேர் பலி: 27பேர் மாயம்; 50,000 பேர் நிர்க்கதி

சீன தலைநகர் பெய்ஜிங்கில் பெய்துவரும் கடும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதுடன் 27 பேர் காணாமல் போயுள்ளதுடன் 50ஆயிரம் பேர் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

சீனாவை தாக்கிய டோக்சுரி சூறாவளியால் கடந்த சனிக்கிழமை முதல் பல்வேறு பகுதிகளில் கடும் மழை பெய்துவருகிறது.


பெய்ஜிங், டியாஞ்சென் போன்ற நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. பெய்ஜிங்கில் 50 ஆயிரம் பேர் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மீட்பு பணிகளில் ஈடுபட்டிருந்த 2 பேர் உட்பட 11 பேர் வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தனர். மாயமான 27 பேரை தேடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நடுவழியில் நிறுத்தப்பட்ட ரயில்களில் சிக்கிக்கொண்ட இரண்டாயிரத்து 800 பேருக்கு இராணுவ ஹெலிகொப்டர்கள் மூலம் உணவு மற்றும் குடிநீர் வழங்கப்பட்டது.

# சந்திரயான்-3இன் அடுத்த ‘ஸ்டொப்’ நிலா தான்

புவி வட்டத்தின் இறுதி சுற்றுப் பாதையை வெற்றிகரமாக நிறைவு செய்து சந்திரயான்-3 விண்கலம், நேற்று நள்ளிரவு (01) 12.05 முதல் நிலவின் வட்டப் பாதைக்குள் பயணிக்க தொடங்கியுள்ளது. ''சந்திரயான்-3 விண்கலத்தின் அடுத்த ஸ்டொப் நிலா தான்'' என இஸ்ரோ தெரிவித்துள்ளது.




இதுகுறித்து இஸ்ரோ வெளியிட்டுள்ள தகவலில்,

''சந்திரயான்-3 விண்கல பயணத்தின் மிக முக்கியமான படி, புவி வட்டப் பாதையிலிருந்து, நிலவின் சுற்றுப்பாதைக்குள் செல்வது. அதன்படி, நிலவின் சுற்றுப்பாதைக்குள் சந்திரயான் நுழைய 28 முதல் 31 நிமிடங்கள் எடுத்துக் கொண்டுள்ளது. சரியான பாதையில் எதிர்பார்க்கப்பட்டதைவிட மேலும் கூடுதலான வேகத்தில் நிலாவை நோக்கி சந்திரயான் சென்று கொண்டிருக்கிறது. அடுத்த ஸ்டொப் நிலா தான்'' - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதிமுதல் நிலவின் சுற்று வட்டப்பாதைக்குள் பயணிக்கப் போகும் சந்திராயன்-3 விண்கலம், ஓகஸ்ட் 23ஆம் திகதி மாலை, அதன் லேண்டர் கருவியை நிலவின் மேற்பரப்பில் மெதுவாக தரையிறக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஒரே மாதத்தில் இரு சூப்பர் மூன்கள்



இரவு வானை அலங்கரிக்கும் இரு சுப்பர் மூன்கள் தோன்றும் அரிய மாதமாக இம்மாதம் அறியப்படுகிறது.

முழு நிலவு நாட்களில் நிலா காட்சியளிக்கும் அளவை விட 08 மடங்கு அளவில் பெரியதாக காட்சியளிப்பதே ‘சூப்பர் மூன்’ என்று அழைக்கப்படுகிறது. பூமிக்கு சற்று நெருக்கமாக முழு நிலவு காட்சி அளிக்கும் சூப்பர் மூன் நிகழ்வு, ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட மாதங்களில் நிகழ்கிறது.

ஆனால், நடப்பாண்டு ஒரே மாதத்தில் இரு சூப்பர் மூன்கள் காட்சியளிக்கவுள்ளமை அரிய நிகழ்வாக பார்க்கப்படுகிறது. அதன்படி, நேற்று நள்ளிரவு முதல் சூப்பர்மூன் தோன்றிய நிலையில் 2ஆவது சுப்பர்மூன் எதிர்வரும் 30ஆம் திகதி தோன்றவுள்ளது. பொதுவாக ஒரே மாதத்தில் தோன்றும் 2ஆவது சூப்பர் மூனை ‘ப்ளூ மூன்’ என அழைக்கின்றனர். அடுத்த சூப்பர் ப்ளூ மூன் 2032ஆம் ஆண்டு நிகழவுள்ளது.

# 91 குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம்: அவுஸ்திரேலியாவில் ஒருவர் கைது

அவுஸ்திரேலியாவில் 91 குழந்தைகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக தெரிவித்து குழந்தை பராமரிப்பு நிலையத்தின் முன்னாள் பணியாளர் ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.




கைதுசெய்யப்பட்டு குழந்தை பராமரிப்பு நிலையத்தின் முன்னாள் பணியாளர் ஒருவர் மீது சுமார் ஆயிரத்து 623 பாலியல் குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது அவுஸ்திரேலிய வரலாற்றில் மிக மோசமான குழந்தை பாலியல் துஷ்பிரயோக வழக்குகளில் ஒன்று என தெரிவிக்கப்படுகிறது.

குறித்த 45 வயதுடைய குழந்தை பராமரிப்புப் பணியாளர் மீது 136 துஷ்பிரயோக வழக்குகள், 10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுடன் 110 வன்புணர்வு சம்பவங்கள் உட்பட ஆயிரத்து 623 பாலியல் குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளன என அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் (AFP) தெரிவித்துள்ளது.

# தானேவில் கிரேன் சரிந்து வீழ்ந்து 17 பேர் உடல் நசுங்கி உயிரிழப்பு

மகாராஷ்டிரா மாநிலம் தானேவில் பாலம் கட்டும் பணியின்போது கிரேன் சரிந்து வீழ்ந்த விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.

தானேவில் சம்ருத்தி எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையின் கட்டுமானப் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த நேரத்தில் கிரேன் சரிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 17 தொழிலாளர்கள் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலும் 5 பேர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என தெரிவிக்கப்படும் நிலையில் மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன.



# சிறைகளில் உயிர்நீத்த 54 தமிழ் அரசியல் கைதிகளின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு





யாழ்ப்பாண மாவட்ட குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில், சிறைகளில் உயிரிழந்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகிய 54 தமிழ் அரசியல் கைதிகளின் நினைவேந்தல் தினம் நேற்று யாழ்ப்பாணம்- குருநகர் புதுமை மாதா தேவாலயத்துக்கு அருகாமையில் உள்ள வாஸ்து தலத்தில், குறித்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் தலைமையில் நடைபெற்றது.

இவ் நினைவேந்தலுக்கு மத ஆசி உரைகளை வழங்குவதற்காக யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ்ப்பாண மாவட்ட பங்கு குருமுதல்வர் ப.ஜெயபரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் சிறைகளில் உயிரிழந்த குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகிய 54 தமிழ் அரசியல் கைதிகளின் உருவப்படத்துக்கான பிரதான சுடரை யாழ்ப்பாணம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் ஏற்றினார். பின் மலர்மாலையினை யாழ்ப்பாண மாவட்ட பங்கு குருமுதல்வர் ப.ஜெயபரட்ணம் அணிவித்தார்.

இதனை தொடர்ந்து நினைவேந்தல் மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டதுடன் நினைவேந்தல் மெழுகுவர்த்தியும் ஏற்றப்பட்டது. இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள், அரசியல் கைதிகளாக இருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், குடும்ப உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டு நினைவேந்தலினை அனுஷ்டித்தனர்.

# இந்திய வர்த்தகக் குழு யாழ். வருகை





இந்திய வர்த்தக குழுவொன்று வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மற்றும் மாகாண அரசாங்க அதிகாரிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து மாகாணத்தில் பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தினால் இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து, மேம்படுத்தப்பட்ட புவியியல் மற்றும் வர்த்தக இணைப்புகள் கலந்துரையாடப்பட்ட விடயங்களில், இந்திய தொழில்கள் கூட்டமைப்பு மற்றும் விவேகானந்தா சர்வதேச அறக்கட்டளையின் பல துறை பிரதிநிதிகள், மரபுசார் போன்ற துறைகளில் நிபுணர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களை உள்ளடக்கியது.

மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, தளவாடங்கள் மற்றும் உள்கட்டமைப்பு கப்பல் போக்குவரத்து, நீர் மேலாண்மை, தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் விவசாயம் ஆகியவை மேலே குறிப்பிட்ட பகுதிகளில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்தன.

இந்திய முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுடனான நெருக்கமான ஒத்துழைப்பு இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீள உதவும் அதேவேளையில் பகிரப் பட்ட செழிப்பை உறுதி செய்யும் என ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் குறிப்பிட்டார்.

கைத்தொழில், நகர அபிவிருத்தி அதிகார சபை, முதலீட்டு சபை, கூட்டுறவு, பால் பண்ணை மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகிய திணைக் களங்களின் அதிகாரிகள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

வடமாகாணத்துக்கான தமது 03 நாள் விஜயத்தின்போது சம்பந்தப்பட்ட முதலீட்டுத் தளங்களையும் பார்வையிடும் அதேவேளை, வடமாகாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்களைச் சந்திப்பதற்கும் தூதுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.





தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிரான 6ஆவது கட்ட போராட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய நிலையில் நேற்று இரண்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

போராட்டக்களத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

அடாத்தாக அபகரித்த மக்களது காணிகளில், அனுமதியின்றி இந்த விகாரை அமைக்கப்பட்ட நிலையில், மக்களது நிலங்களை மீள வழங்குமாறு கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடு செல்லும் இளைஞர்களை அச்சுறுத்தி விமான நிலையத்திலேயே பணம் பறிக்கும் கும்பல்

சுற்றுலா விசா மூலம் கொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு வேலைக்காக வெளிநாடு செல்ல விமான நிலையத்துக்கு வரும் இளைஞர்களை பயமுறுத்தி பணம் பறிக்கும் கும்பல் குறித்து பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கை கிடைத்துள்ளது.

இது குறித்து விசாரணை நடத்த பொது பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த குழுவில் விமான நிறுவனங்களின் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பலின் நடவடிக்கையினால் கொரியாவில் பணிபுரிய வந்த இலங்கை இளைஞர்களுக்கான விமானங்கள் கூட தாமதமாகி வருவதாக இதுவரை கிடைத்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு அமைச்சில் பணிபுரியும் இராணுவ அதிகாரி ஒருவரின் உறவினரை இந்தக் கும்பல் மிரட்டி இருநூறு அமெரிக்க டொலர்களை பெற்றுக்கொண்டதாக முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து இந்த மோசடி வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இமிகிரேஷன் அதிகாரிகள் போல் நடித்து, வரியில்லா பொருட்களை விற்பனை செய்யும் கடைகளுக்கு அருகில் உள்ள பகுதியில் ஒரே நேரத்தில் மூன்று அல்லது நான்கு இளைஞர்களை கைது செய்து, அருகில் உள்ள அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று பணம் பறிக்கும் வேளையில் ஈடுபடுவதாக தெரியவந்துள்ளது.

சுற்றுலா விசாவில் கொரியாவுக்கு செல்ல வரும் இளைஞர் குழுக்களே இந்தக் கும்பலால் அதிகம் குறிவைக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது, இந்த ஏற்பாடு செய்யப்பட்ட குழுக்கள் பயணிகளை கடைசி நிமிடம் வரை தாமதப்படுத்துவதாக தகவல் கிடைத்துள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் ஆலோசனையின் பேரில் இந்த ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் பற்றிய மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# ஓட்டோ கட்டணங்களில் உயர்வில்லையென அறிவிப்பு

முச்சக்கரவண்டி கட்டணங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படாது என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

கட்டண திருத்தம் தொடர்பில் கிரமமான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என குறித்த ஒன்றியத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண சபையில் இது தொடர்பிலான ஓர் குழு நியமிக்கப்பட்டபோதிலும் துரதிர்ஷ்டவசமாக கட்டண ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், அரசாங்கத்தின் எரிபொருள் விலை மாற்றத்துக்கு ஏற்ற வகையில் கட்டண திருத்தத்தை மேற்கொள்வதில்லை என ஒன்றியம் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**சாரதிகளிடம் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை**

வாடிக்கையாளர்களுடன் பேசி கட்டணம் தொடர்பில் தீர்மானிக்குமாறு முச்சக்கரவண்டி சாரதிகளிடம் கோரியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின் விலைகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

# சிறைச்சாலையில் அம்மை நோய் இரண்டு வாரங்கள் முடக்கம்!

வவுனியா நிருபர்

வவுனியா சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளமையால் சிறைச்சாலை 14 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளதுடன், கைதிகளை உறவினர்கள் பார்வையிடுவதும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்தவாரம் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலருக்கு அம்மை நோய் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, சிறைச்சாலை வளாகம் 14 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளதுடன், கைதிகளை அவர்களது உறவினர்கள் பார்வையிடுவதற்கான செயற்பாடும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, நோய்ப்பரவலை கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் அனைத்து கைதிகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் விளக்கமறியலில் உள்ள கைதிகளின் நீதிமன்ற தவணைகளுக்கு புதிய திகதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், சில வழக்குகள் நிகழ்நிலை தொழில்நுட்ப உதவியுடன் இடம்பெற்றுவருகின்றது.

இதேவேளை, வவுனியா சிறைச்சாலையில் இடவசதி பற்றாக்குறை நீண்டகாலமாக உள்ளதுடன் அளவுக்கதிகமான கைதிகள் அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஏறாவூர் காட்டுமாஞ்சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் தீ மிதிப்பு உற்சவம் செவ்வாய்க்கிழமை(01) இடம்பெற்றது. இதன்போது தாகசாந்தி மற்றும் அன்னதானம் என்பன வழங்கப்பட்டதுடன் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருடாந்த உற்சவம் நிறைவுற்றது. **படம்:** ஏறாவூர் செய்தியாளர்



அக்கரைப்பற்று அருள்மிகு ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான சங்காபிஷேகம் செவ்வாய்க்கிழமை(01) இடம்பெற்றது. 1008 சங்குகளைக் கொண்டு பஞ்சமுக ஆஞ்சநேயர் பெருமானுக்கு சங்காபிஷேகம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றதுடன், மரபு முறைப்படி மூலிகைகளைக் கொண்டு மாபெரும் யாகம் வளர்க்கப்பட்டு சங்காபிஷேகம் இடம்பெற்றது.

**படங்கள்:** திருக்கோவில் மேலதிக செய்தியாளர்



பெரியகல்லாறு ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இடம்பெற்ற தேரோட்டம் செவ்வாய்க்கிழமை(01) இடம்பெற்றது. இன்று 02ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் மதியம் மகேஸ்வர பூஜையும் மாலை கொடி இறக்கமும் நடைபெறும். மறுநாள் வியாழனன்று பூங்காவனத் திருவிழா நடைபெறுவதுடன் வெள்ளிக்கிழமை வைரவர் பூஜையுடன் மஹோற்சவ நிகழ்வுகள் நிறைவுறும். **படம்:** கல்லாறு செய்தியாளர்



காரைதீவு மாவடி ஸ்ரீகந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் தேரோட்டம் இடம்பெறும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை(01) காலை இடம்பெற்றது. **படம்:** காரைதீவு செய்தியாளர்



மட். /ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் பல வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வுநிலை மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி முதல்வர் எஸ்.நந்தகோபால் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது அதிதிகள் வரவேற்கப்பட்டு அவர்களுக்கான வாழ்த்துப்பா, பரிசில்கள் அதிபர் ஆசிரியர்களினால் வழங்கிவைக்கப்பட்டதுடன் விருந்துபசார நிகழ்வும் இடம்பெற்றது.

**படம்:** ஆரையம்பதி செய்தியாளர்

# பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் வாழ்வும் பணியும் நூல் வெளியீட்டு நிகழ்வு



மாளிகைக்காடு செய்தியாளர்

''பேராசிரியர் மர்ஹூம் எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் - வாழ்வும் பணியும்'' நூல் வெளியீட்டு விழா கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் ஏற்பாட்டில் தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தின் கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (31) இடம்பெற்றது.

கிழக்கு முஸ்லிம் கல்விப் பேரவையின் தலைவரும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கை அறபு மொழி பீடத்தின் முன்னாள் பீடாதிபதியுமான பேராசிரியர் எம்.எஸ்.எம்.ஜலால்தீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, சிறப்பு அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பேராசிரியர் எம்.பி.எம். இஸ்மாயில் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். நூல் அறிமுக உரையை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நிகழ்த்தினார். விரிவுரையாளர் எம்.அப்துல் றஸாக் கவிதை பொழிந்ததுடன் பிரதம அதிதி மற்றும் சிறப்பதிதிகள் ஆகியோரின் உரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், நூலகர், ஊவா வெல்லச பல்கலைக்கழக பதிவாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர்கள், பேரவை உறுப்பினர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.ரீ.ஹசன் அலி, இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் பிரமுகர்கள், கல்விமான்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் நடைபெற்ற விரித்தி விழா



கல்லடி செய்தியாளர்

இலங்கை - UNOPS விரித்தி வலையமைப்பின் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் உறுப்பினர்களுடன் இணைந்து கிழக்கு மாகாண சமூகங்களுக்கிடையே சிவில் சமூக நிறுவனங்களின் பங்களிப்புகளை வெளிப்படுத்தும் வகையில் முதல் விரித்தி விழா மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை (29), ஞாயிற்றுக்கிழமை (30) ஆகிய இரு தினங்கள் இடம்பெற்றது.

விரித்தி என்பது இலங்கையில் உள்ள சிவில் சமூக அமைப்புகளுக்கிடையேயான வலையமைப்பு, ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்காக உருவாக்கப்பட்ட ஒரு தளமாகும். புவியியல் அமைவிடம், ஆர்வமுள்ள பகுதிகள் மற்றும் பகிரப்பட்ட மதிப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் சிவில் சமூகங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை செயற்படுத்துவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவதை விரித்தி நோக்கமாகக் கொண்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் சிவில் சமூகத்தின் தாக்கமானது, மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி முயற்சிகள் மூலம் சமூக சேவையில் கவனம் செலுத்தும் வகையிலான ஈடுபாடு மற்றும் சேவை வடிவிலேயே காணப்படுகின்றது.

தொடரும் இந்தக் கூட்டுறவை நினைவுகூரும் வகையிலேயே இவ்விரித்தி விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விரித்தி வலையமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பங்கேற்புடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை இவ்விழா வெளிப்படுத்தியது. இப்பொது நிகழ்வானது, பார்வையாளர்களுக்கு சிவில் சமூகத்தைச் சேர்ந்த பங்கேற்பாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவும் விரித்தி வலையமைப்புடன் இணையவும் வாய்ப்பளிக்கின்றது.

இவ்விழாவில் குழுக்கலந்துரையாடல்கள், உள்ளூர்க் கலைஞர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதோடு கைவினைப் பொருட்கள், சிறு தானிய உற்பத்திப் பொருட்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சிராஜ்நகர் கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் இளைஞர்களுக்கான போதைப்பொருள் பாவனைத் தடுப்பு தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வு திங்கட்கிழமை (31) இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இளைஞர் சேவை அதிகாரி ஜாபிர் ஏற்பாட்டில் இடம்பெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன் வளவாளராகக் கலந்து கொண்டார். இதன் போது போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக நாடக செயற்பாடும் ஆலோசனை வழிகாட்டலும் இடம்பெற்றன.

**படம்:** கிண்ணியா செய்தியாளர்

# அந்நூர் பாடசாலையில் சின்னம் சூட்டும் நிகழ்வு





மீராவோடை செய்தியாளர்

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு திங்கட்கிழமை (31) இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.சீ.அப்துல் நாஸர் கலந்துகொண்டு மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, சிரேஷ்ட விரிவுரையாளர் அப்துல் நாஸர், பாடசாலை அதிபர் ஏ.எம்.எம்.தாஹிரினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டார். பாடசாலை பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மாணவத் தலைவர்கள் தங்களது கடமைகள் தொடர்பில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ட்ரோன் தொழில்நுட்ப பிரயோக பயிற்சிநெறி



கல்முனை செய்தியாளர்

இலங்கை கிழக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை விசேட மாணவர்களுக்கு ட்ரோன் தொழில்நுட்பத்தை புவியியல் ஆய்வுகளில் பயன்படுத்துவது தொடர்பான பயிற்சிநெறி கலை, கலாசார பீட கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை(27) இடம்பெற்றது.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் கலை, கலாசார பீடத்தின் புவியியற்றுறைத் தலைவர் கே.நிஜாமிர் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சிநெறியில் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாசில், புவியியற்றுறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல், கலாநிதி எஸ்.றபீக்கா அமீர்தீன், எம்.எல்.எவ்.அமீர் மற்றும் ஏனைய புவியியற்றுறை விரிவுரையாளர்களும் சிரேஷ்ட உதவி பதிவாளர் உட்பட கிழக்கு பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர்களும் புவியியற்றுறை விசேட துறை மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆரம்ப நிகழ்வில் விசேட உரையாற்றிய பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில் பல்கலைக்கழகம் சமூக மற்றும் பிராந்திய ரீதியில் ஆற்றும் பங்களிப்பினை எடுத்துரைத்து பீடத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றி விளக்கினார். மேலும் இதன்போது புவியியற்றுறைத் தலைவர் கே.நிஜாமிர் ட்ரோன் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி மற்றும் புவியியற்றுறையில் கற்றல் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக ட்ரோன் தொழில்நுட்ப பிரயோகம் அதன் எதிர்கால பயன்பாட்டு நிலை பற்றி எடுத்துரைத்தார்.

அதனைத்தொடர்ந்து பேராசிரியர் கலீலின் விரிவுரை இடம்பெற்றதோடு ட்ரோன் தொழில்நுட்ப பிரயோகம் பற்றி விரிவுரை மற்றும் களப்பயிற்சி போன்றன இடம்பெற்றன.

# சுயதொழில் விற்பனைக் கண்காட்சி



மட்டக்களப்பு

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினால் உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான விற்பனையும் கண்காட்சியும் திங்கட்கிழமை(31) இடம்பெற்றன.

உதவிப் பிரதேச செயலாளர் ல.பிரசாந்தன் தலைமையில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இக்கண்காட்சியில் உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், பிரதேச பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பொருட் கொள்வனவில் ஈடுபட்டனர்.

இக்கண்காட்சி வருடந்தோறும் மூன்று அல்லது நான்கு தடவைகள் நடைபெறுவது வழக்கம். இதனால் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு நிறைவான சந்தை வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்கள் பயன்பெறுகின்றனர்.



கல்முனை மாவட்ட நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் தலைமையில் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் அட்டாளைச்சேனை ஹனிபா மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது.

இந்நிகழ்வானது பகல் இரவு என இரு அமர்வுகளாக 150க்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது. இரண்டாவது அமர்வின்போது சங்கீதக் கதிரை, யானைக்கு வால் வைத்தல், முட்டி உடைத்தல் மற்றும் சிறுவர்களுக்கான கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட சுவாரஸ்யமான பல நிகழ்வுகளும் இடம்பெற்றன. இப்போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

படம்: திராய்க்கேணி செய்தியாளர்

# பிணக்குகளை தீர்க்கும் மத்தியஸ்த சபை அங்கத்தவர்களுக்கு நியமனம் வழங்கல்



அட்டாளைச்சேனை, அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்கள்

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் ஏற்படும் பிணக்குகளை கலந்துரையாடல் மூலம் தீர்த்து வைத்து மாற்றுத் தீர்வுப் பொறிமுறையைப் பரவலாக்கும் வகையில் நீதி அமைச்சின் மூலம் நியமிக்கப்பட்டுள்ள மத்தியஸ்த சபை அங்கத்தவர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை(29) மாலை அக்கரைப்பற்று நீர்ப்பூங்கா வளாகத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் சாபீர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கல்முனை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.சம்சுதீன் கௌரவ அதிதியாகவும் பொத்துவில் பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயில், சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ்.எம்.ஏ.கபூர், எஸ்.எல்.ஏ.றசீட், ஐ.எல்.ஏ.கபூர், அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டங்களுக்கான மத்தியஸ்த சபை பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.எம்.ஆஷாத் உள்ளிட்ட துறைசார் முக்கியஸ்தர்கள் விசேட அதிதிகளாகவும் இதன்போது கலந்து கொண்டனர்.

மூன்று வருடங்கள் செயற்படும் வண்ணம் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள ஒலுவில், அட்டாளைச்சேனை, பாலமுனை, ஆலம்குளம் மற்றும் சம்புநகர் ஆகிய பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், மத்தியஸ்த சபைத் தவிசாளர் ஐ.எல்.எம்.ஹாசீம் தலைமையிலான 43 பேர் இதன்போது நியமனங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இம்முறை அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைக்காக துறைசார் முக்கியஸ்தர்கள் அங்கத்தவர்களாக நியமனம் பெற்றுள்ளமை சிறப்பம்சமாய் விளங்குகின்றது. குறிப்பாக, உள நல உதவியாளர்கள், பெண்கள், சிறுவர்கள் பிரிவில் பணியாற்றும் முன்னிலை உத்தியோகத்தர்கள், மார்க்க அறிஞர்கள், மத நிறுவனங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், பாடசாலைகளின் நேரடித் தொடர்பாளர்கள் என இம்மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம்முறை அட்டாளைச்சேனை மத்தியஸ்த சபைக்கு அங்கத்தவர்களை நியமிக்கும் வகையில் நீதி அமைச்சின் மூலம் விண்ணப்பம் கோரப்பட்டபோது இதற்கென, 217 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களுள் 168 பேருக்கு நேர்முகப்பரீட்சை இடம்பெற்றதுடன், இதில் 68 பேர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுள் 43 பேர் எழுத்து மூலப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்றனர்.

இவ்வாறு நியமனம் பெற்றவர்களுக்கு விசேட பயிற்சிகளும் நீதிமன்றம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு நேரடி களப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு துறைசார் அதிகாரிகளால் அறிவுரைகள், ஆலோசனைகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வயல்வெளியில் ஏற்பட்ட தீப்பரவலினால் பெறுமதியான நீர்க்குழாய்கள் எரிந்து நாசம்



திருக்கோவில் மேலதிக, ஆலையடிவேம்பு செய்தியாளர்கள்

அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் எல்லைக்குட்பட்ட மொட்டையாகல் பகுதியில் 15 நீர்க்குழாய்கள் எரிந்து சேதமாகியுள்ளன.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை(01) இடம்பெற்றுள்ளது. தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் குடிநீர் இணைப்பின் பொருட்டு ஒப்பந்தக்காரரால் சேமித்து வைக்கப்பட்ட குடிநீர் இணைப்பு குழாய்களே இவ்வாறு தீயில் கருகி சேதமாகியுள்ளன.

இந்நிலையில், அக்கரைப்பற்று மொட்டையாகல் பகுதி ஊடாக சாகாமம் பகுதிக்கு நீர் இணைப்பைக் கொண்டுசெல்ல ஒன்றாக சேமித்து வைக்கப்பட்டிருந்த நீர் இணைப்புக் குழாய்கள் மீது வயல் வெளியில் ஏற்பட்ட தீ காரணமாக எரிந்து சேதமாகியுள்ளதாக ஆலையடிவேம்பு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் தெட்சண மூர்த்தி நவனீதராஜ் குறிப்பிட்டார்.

தகவலறிந்து தான் குறித்த இடத்துக்கு தண்ணீர் பவுசருடன் சென்று தீயை அணைக்க உதவியதாகவும் அவர் தெரிவித் தார்.

மேலும், குறித்த தீ விபத்தின்போது இலட்சக் கணக்கில் பெறுமதிவாய்ந்த சுமார் 15 குழாய்கள் எரிந்து சேதமடைந்துள்ளன. விவசாயக் காணிகள் ஊடாக நீர் இணைப்பு சேவை இடம்பெறுவதால் விவசாயிகள் இது தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

பிரதேச சபைச் செயலாளர் மற்றும் தீயை அணைக்க உதவிய தண்ணீர் பவுசர் சாரதி உள்ளிட்டோருக்குத் தான் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் ஒப்பந்தக்காரர் உள்ளிட்ட தரப்பினர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# படகு தீக்கிரை



மூதூர் செய்தியாளர்

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலங்கை துறைமுகத்துவாரம் பகுதியில் செவ்வாய்க்கிழமை(01) அதிகாலை மீன்பிடிப் படகொன்று இனந்தெரியாதோரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.

குறித்த படகானது தீயினால் கருகி முழுமையாக சேதமடைந்துள்ளதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த குறித்த மீன்பிடிப்படகே இவ்வாறு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்

eastthamilan@gmail.com

# விபசார விடுதி சுற்றிவளைப்பு

## இரு பெண்கள் கைது

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்குளம் பகுதியில் நெடுங்காலமாக மறைமுகமாக இயங்கி வந்த விபசார விடுதியொன்று அப்பிரதேச மக்களால் திங்கட்கிழமை(31) சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அச்சுற்றிவளைப்பின்போது விடுதியில் இரகசியமாக விபசாரத்தில் ஈடுபட்ட இரு பெண்களைப் பிடித்து உப்புவெளி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் இருவரும் 25 மற்றும் 30 வயதுடையவர்கள் எனவும் தெரிவித்தனர்.

மேலும், குறித்த இருவரும் அநுராதபுரம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என உப்புவெளி பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன்போது இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் இருவரையும் திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் சிவில் பாதுகாப்பு குழுக்களுடன் கலந்துரையாடல்

அட்டாளைச்சேனை செய்தியாளர்



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் பிரதேசத்தில் செயற்பட்டுவரும் சிவில் பாதுகாப்புக் குழுப் பிரதிநிதிகளுடன் அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை(30) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி டபிள்யூ.எஸ்.ஏ.சதாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொலிஸ் உயரதிகாரிகள், சர்வமதத் தலைவர்கள், சிவில் பாதுகாப்புக் குழு பிரதிநிதிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் அதிகார எல்லைக்குட்பட்ட அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை மற்றும் ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள அனைத்து இன மக்கள் மத்தியிலும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பி நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதன் அவசியம் குறித்தும் விசேட வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டியமை குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள சுமார் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் பொதுமக்களின் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து செயற்படவேண்டிய விதம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையை மக்கள் மத்தியிலிருந்து இல்லாதொழிப்பது தொடர்பிலும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட நடைமுறைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் நிகழும் பெண்கள், சிறுவர்கள் தொடர்பான குற்றச் செயல்கள், கொள்ளைச் சம்பவங்கள், வீட்டு வன்முறைகள், அநீதிகள், இரவு வேளைகளில் தேவையற்ற வகையில் நடமாடும் நபர்கள் தொடர்பான விடயங்கள், குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் போன்றன தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், இவ்வாறான விடயங்களில் இனிவரும் காலங்களில் சிவில் பாதுகாப்புக் குழுவினரும் பொலிஸாரும் இணைந்து செயற்பட வேண்டிய விதம் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது.

வீதி விபத்துகள், டெங்கு நோய்த் தாக்கம் போன்றவற்றால் நாளாந்தம் பல்வேறான உயிரிழப்புகள் மக்கள் மத்தியில் ஏற்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு மக்கள் அனைவரும் முன்வர வேண்டியதன் அவசியம் குறித்தும் அனைத்து இனத்தவர்கள் மத்தியிலும் பரஸ்பர ஒற்றுமையை வளர்க்கும் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானைகள் அட்டகாசம் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் அண்மைக்காலமாக உப உணவு மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் காட்டு யானைகளின் தொல்லைகளினால் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவின் இருட்டுச் சோலைமடுப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (30) இரவு காட்டு யானை தென்னந் தோட்டங்களில் உட்புகுந்து தென்னை மரச்செய்கையை பெரிதும் நாசப்படுத்தியுள்ளதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஐந்து வருடங்களாக வளர்த்தெடுக்கப்பட்ட இந்த தென்னை மரங்களை காட்டு யானை ஒரே இரவில் அழித்து நாசமாக்கி பெரும் நஷ்டத்தை உண்டாக்கியிருப்பதாகத் தெரிவிக்கும் அவர்கள், இதனால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு அரசாங்க அதிகாரிகள் முன் வரவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

தாம் பெரும் நஷ்டத்தை அடைந்துள்ள போதிலும், இதற்கு ஏதாவது உதவிகள் வழங்க முன்வராவிட்டால் நாட்டுக்கு வருமானத்தைத் தேடித் தரக்கூடிய இந்த தென்னைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடாது தாம் வாழ்வாதாரத்துக்காக பெரிதும் கஷ்டப்பட வேண்டிவரும். எனவே, இக்காட்டு யானைப் பிரச்சினையைத் தீர்க்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வாகனங்கள் மோதி விபத்து

குருக்கள்மடம் செய்தியாளர்


களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பகுதியில் சிறிய ரக பட்டா வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் திங்கட்கிழமை(31) பி.ப. 3.30 மணிக்கு இடம்பெற்றுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சிறிய ரக பட்டா வாகனத்தின் சாரதி வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவருக்கும் காயங்கள் ஏற்பட்டதுடன் சாரதியும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



இந்தியாவோட நம்மட வடக்கு கிழக்க இணைக்கப்புறாராம் ரெலோ கட்சி தலைவர் செல்வம் அடைக்கலநாதன்...! அடே பொடியா அப்ப சீனாவோட நீங்க ரகசியமாக கையாண்ட அந்த சீனி கொம்பனிய எதோட இணைக்கப்போறயள் எண்டதயும் ஒள்ளுப்பம் சொன்னால் நல்லம்.. போர் காலத்தில ஒருக்கா மன்னாரில வைச்சு நீ பேசினது மறந்து போச்சாடாம்பி.... மன்னாரில இருந்து ஏவுகணயால அடிச்சா கொழும்பு நடுங்கும் எண்டு வாயால வட சுடுற ஆள்தானே நீ... நீங்க கதைக்க மட்டும்தான் லாயக்கு வேற ஒண்டுக்கும் உதவாத ஆக்கள் நீங்க எண்டது ஊர் ஒலகத்துக்கும் தெரியும் எலுவா....?

# ‘நவீன நூலக நடைமுறைகள்’ எனும் தலைப்பில் மூன்று நாள் பயிற்சிநெறி





மாளிகைக்காடு செய்தியாளர்

‘நவீன நூலக நடைமுறைகள்’ எனும் தொனிப்பொருளில் தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தில் கடமையாற்றும் கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான மூன்று நாள் பயிற்சிநெறி தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், கொழும்பு தேசிய நூலகம், தேசிய ஆவணவாக்கல் சபை மற்றும் பேராதனை பல்கலைக்கழகம் போன்றவற்றில் பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீனின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி சல்பியா ஜலீல் நெறிப்படுத்தலில் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் அனுமதியுடன் நடைபெற்ற இப்பயிற்சிநெறியின் முதல் நாள் அங்குரார்ப்பண நிகழ்வு கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் டாக்டர் ஜே.ஜெயராஜ் தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீன், சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.சி.எம்.அஸ்வர், எஸ்.எல்.எம்.சஜீர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களான எம்.என்.ரவிக்குமார், எஸ்.சாந்தரூபன், என்.காயத்ரி, எல்.ஜெகதீஸ்பரன் மற்றும் நூலக உதவிப் பதிவாளர் வீ.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்குரார்ப்பண நிகழ்வை ஆரம்பித்து வைத்து கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் டாக்டர் ஜே.ஜெயராஜ் உரையாற்றுகையில், தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்கள் எமது கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்தைத் தெரிவுசெய்து எங்களது சேவைகள் மற்றும் வளங்கள் பற்றி அறிவதற்கும் அதிலிருந்து கற்றுக் கொள்வதற்குமாக வருகை தந்திருக்கின்ற தென்கிழக்கு பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்களை கிழக்கு பல்கலைக்கழக நூலகம் சார்பாக வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும் இதனை ஒழுங்கு செய்து இங்கு அழைத்துவந்த பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீனுக்கு நான் நன்றி கூறுகின்ற அதேவேளை, இவ்விரு பல்கலைக்கழக நூலக உத்தியோகத்தர்களும் தாங்கள் எதிர்காலத்தில் எமது இரு நூலகங்களுக்குமிடையில் ஏற்படுகின்ற தொழில் மற்றும் சேவைரீதியான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்றும் அதன்மூலம் மாணவர்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்குவது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் இப் பல்கலைக்கழகமானது 1981ஆம் ஆண்டு பல்கலைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டு 1986ஆம் ஆண்டு பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டதென்றும் அவ்வாறு தரமுயர்த்தப்பட்ட பல்கலைக்கழக நூலகத்தைக் கட்டியெழுப்புவதில் தாங்கள் பாரிய சவால்களை எதிர்கொண்டதாகவும் அந்தச் சவால்களுக்கு எமது நூலக உத்தியோகத்தர்கள் தங்களாலான முழு ஒத்துழைப்புகளையும் அர்ப்பணிப்புடன் செய்ததை இங்கு சுட்டிக்காட்டி தனதுரையை முடித்தார்.

அதனைத் தொடர்ந்து தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீன் பேசுகையில், முதலில் இவ்வாறானதொரு நிகழ்வை ஏற்பாடு செய்துதந்த பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கருக்கு ஊழியர் மேம்பாட்டு நிலையப் பணிப்பாளர் டாக்டர் சல்பியா ஜலீலுக்கும் நன்றி கூறி தொடர்ந்து பேசுகையில், கலாநிதி ஜெயராஜ் பேசியது போல் இரு பல்கலைக்கழகங்களும் எமது தாய் மொழியில் சேவைகளை வழங்குவனவாக இருக்கின்றமையினால் எமக்குள் இருக்கின்ற நூலக சேவை வழங்கல்கள் சம்பந்தமான பிரச்சினைகளை இலகுவில் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்றும் அதன்மூலம் எமது மாணவர்களுக்கு ஒரு சிறப்பான நவீன நூலக நடைமுறைகள் சேவையை வழங்க முடியும். அதேபோல், ஊழியர்களும் தங்களுக்குள்ளான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் எதிர்காலங்களில் இரு நூலகங்களும் சேர்ந்து தங்களுக்குள் வளங்களைப் பகிர்ந்துகொள்ள முடியுமென்றும் கூறினார்.

மேலும் நூலகர் றிபாயுடீன் கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் மற்றும் நூலக உத்தியோகத்தர்களை தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகத்துக்கு சிநேகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும் அழைப்பொன்றை விடுத்திருந்தார். இறுதியாக நூலகர் எம்.எம்.றிபாயுடீனினால் கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்துக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் நூலகர் ஜெயராஜிடம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இரு நூலகர்களினதும் உரையைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர்களினால் அங்குள்ள சேவைகள் மற்றும் வளங்கள் பற்றி தென்கிழக்கு நூலக உத்தியோகத்தர்களுக்கு விரிவான பயிற்சிகளும் விளக்கங்களும் வழங்கப்பட்டன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# ஐந்தாவது டெஸ்ட்டை வென்று ஆஷஸை சமன் செய்த இங்கிலாந்து

## தனது இறுதி டெஸ்ட்டில் ஹீரோவான ப்ரோட்




நடப்பு எல்.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் தம்புள்ள - காலி அணிகளுக்கிடையிலான போட்டி இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது திடீரென மைதானத்துக்குள் 6 அடி நீளமுள்ள பாம்பு வேகமாக வந்தது. இதனால் மிரண்டு போன வீரர்கள் சிறிது நேரம் ஆட்டத்தை நிறுத்தினர். பின்னர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் நடுவர்கள் இணைந்து பாம்பை மைதானத்தில் இருந்து வெளியேற்றினர். அதில் பாம்பின் பின் சென்று நடுவர் எளிதாக விரட்டியது ரசிகர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

பரபரப்புக்கும் விறுவிறுப்புக்கும் பஞ்சமில்லாமல் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரில், லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்று தொடரை 2-2 என்ற அடிப்படையில் சமன் செய்தது. எனினும் கடந்த ஆஷஸ் தொடரில் சம்பியன் பட்டத்தை கைவசம் வைத்துள்ள ஆஸி. அணியின் பக்கம் தொடர்ந்து ஆஷஸ் கிண்ணம் தங்கியுள்ளது.

கடந்த 27ஆம் திகதி தொடங்கிய இறுதி டெஸ்ட்டில், முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 283 ஓட்டங்களும் அவுஸ்திரேலியா 295 ஓட்டங்களும் எடுத்தன. பின்னர் இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து 395 ஓட்டங்களுக்கு ஆல்அவுட் ஆனதால், அவுஸ்திரேலிய அணிக்கு 384 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

அலெக்ஸ் கேரி இறுதிவரை வெற்றிக்காக போராடினார். ஆனால் ஸ்டூவர்ட் ப்ரோட் கடைசி விக்கெட்டாக கேரியை (28) அவுட் செய்து இங்கிலாந்தை வெற்றிபெற வைத்தார். அவுஸ்திரேலிய அணி 334 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்ததால், இங்கிலாந்து 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை ருசித்தது.

தனது கடைசி டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடிய ஸ்டூவர்ட் ப்ரோட், அவுஸ்திரேலியாவின் இறுதியான 2 விக்கெட்டுகளை கைப்பற்றி ஹீரோவானார்.



## ஜூன் 4இல் ரி20 உலகக்கிண்ணம் ஆரம்பம்?


மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்காவில் இடம்பெறவுள்ள 2024ஆம் ஆண்டுக்கான ரி20 உலகக்கிண்ணத் தொடரானது ஜூன் மாதம் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை இடம்பெற வுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகள் 10 மைதானங்களில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் உள்ள பல மைதானங்களை ஐ.சி.சி. அதிகாரிகள் குழு இந்த வாரம் ஆய்வு செய்துள்ளது. அமெரிக்காவை பொறுத்தமட்டில் லாடர்ஹில், புளோரிடா மற்றும் மோரிஸ்வில்லி, டல்லாஸ் மற்றும் நியூயோர்க்கில் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், டல்லாஸில் உள்ள கிராண்ட் ப்ரேரி மைதானம், மோரிஸ்வில்லில் உள்ள சர்ச் ஸ்ட்ரீட் பார்க் மைதானம் மற்றும் நியூயோர்க்கில் உள்ள வான் கார்ட்லாண்ட் பார்க் மைதானம் ஆகிய 3 மைதானங்களும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை நடத்த இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை.

போட்டிகள் இடம்பெறும் மைதானங்கள் குறித்து, மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்க கிரிக்கெட் சபைகளுடன் கலந்துரையாடி அடுத்த சில வாரங்களில் ஐ.சி.சி. இறுதி முடிவுகளை எடுக்கும்.

## எல்.பி.எல் ஆரம்ப விழா
### உடனடி விசாரணைக்கு உத்தரவு



நடப்பு எல்.பி.எல். தொடரின் ஆரம்ப விழாவில் பாடகி உமார சிங்ஹசங்க இலங்கையின் தேசிய கீதத்தின் பொருள் மாறும் வகையில், புதிய பாணியில், தேசிய கீதம் இசைக்கப்பட்டமை தொடர்பில், தற்போது பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

1978 ஆண்டு அரசியலமைப்பின் படி, தேசிய கீதத்தின் வரிகள் மற்றும் அதன் பின்னணி இசையை மாற்றி இசைக்கப்பட்டமை நாட்டின் கீர்த்தியையும் அரசியலமைப்பையும் மீறும் செயற்பாடாகும்.

இந்நிலையில் தேசிய கீதம் தவறாக உச்சரித்து பாடப்பட்டமை தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விரிவான விசாரணையை ஆரம்பிக்குமாறு பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

## சுப்பர் ஓவரில் வெற்றியீட்டிய கோல் டைட்டன்ஸ்

2023 எல்.பி.எல் தொடரில் தம்புள்ள அவுரா அணிக்கு எதிரான 2ஆவது லீக் போட்டியில் கோல் டைட்டன்ஸ் அணி சுப்பர் ஓவரில் வெற்றியீட்டியது. அணித் தலைவர் தசுன் ஷானகவின் சகலதுறை ஆட்டம், பானுக ராஜபக்ஷவின் அபார துடுப்பாட்டம் என்பவை கோல் டைட்டன்ஸ் அணியின் வெற்றியில் பிரதான பங்காற்றின.

கொழும்பு ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற தம்புள்ள அவுரா அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை கோல் டைட்டன்ஸ் அணிக்கு வழங்கியது.

அதன்படி களமிறங்கிய கோல் டைட்டன்ஸ் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. 181 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அவுரா அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை எடுக்க போட்டி சமநிலையில் முடிந்தது



சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ள அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 9 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய கோல் டைட்டன்ஸ் அணி 11 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. பானுக்க ராஜபக்ஷ ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி அடித்து அந்த அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். போட்டியின் ஆட்டநாயகனாக கோல் டைட்டன்ஸ் அணியின் தலைவர் தசுன் ஷானக தெரிவானார்.

உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு செய்திகளை தமிழன் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினால், செய்தியை சுருக்கமாக எழுதி, உங்கள் பெயர், ஊர், தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு Thamilansports@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

## போராடித் தோற்ற இலங்கை அணி




தென்னாபிரிக்காவின் கேப்டவுணில் இடம்பெறும் உலகக்கிண்ண வலைப்பந்தாட்ட தொடரில் தத்தமது முதலாவது வெற்றியை குறிவைத்து களமிறங்கிய இலங்கை அணி 68 - 56 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வேல்ஸ் அணியிடம் தோல்வி கண்டது. முதல் இரு ஆட்டங்களிலும் தோல்வியடைந்த இலங்கை அணி இந்த தோல்வியுடன் சேர்த்து லீக் சுற்றில் தங்களது அனைத்து ஆட்டங்களிலும் தோல்வியைத் தழுவியது.

ஒவ்வொரு குழுவிலிருந்தும் முதல் 3 அணிகளே இரண்டாம் சுற்றுக்கு செல்ல தகுதிபெறும் என்ற நிலையில் இலங்கையை வெற்றிகொண்ட வேல்ஸ் அந்த வாய்ப்பை தனதாக்கிக்கொண்டது. சி குழுவில் 3 போட்டிகளிலும் தோல்வி அடைந்த இலங்கை 13ஆம் இடத்திலிருந்து 16ஆம் இடம்வரையான நிரல்படுத்தல் சுற்றில் விளையாடவுள்ளது.

## விளையாட்டுத் துளிகள்

அமெரிக்காவில் முதல் முறையாக இடம்பெற்ற மேஜர் லீக் கிரிக்கெட் தொடரில் நிகோலஸ் பூரன் தலைமையிலான எம்.ஐ.நியூயோர்க் அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. டெக்சாஸின் டல்லாஸ் நகரில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சியாட்டில் ஓர்காஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா எம்.ஐ. நியூயோர்க் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

★★★★★★

மேற்கிந்திய தீவுகள் இளையோர் (19 வயதுக்குட்பட்ட) அணி இரண்டு டெஸ்ட் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆட இலங்கைக்கு வருகைத்தரவுள்ளது. ஓகஸ்ட் 27ஆம் திகதி முதல் செப்டெம்பர் 15ஆம் திகதிவரை போட்டிகள் இடம்பெறவுள்ளன. ஒருநாள் தொடர் ஓகஸ்ட் 27, 30 மற்றும் செப்டெம்பர் 01ஆம் திகதிகளிலும் டெஸ்ட் போட்டிகள் செப்டெம்பர் 05 மற்றும் 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

★★★★★★

எல்.பி.எல். தொடரின் மூன்றாவது போட்டியில் பி-லவ் கண்டி அணியை எதிர்கொண்ட கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை பதிவுசெய்தது. போட்டியின் ஆட்டநாயகனாக 59 ஓட்டங்களை விளாசிய கொழும்பு ஸ்ரைக்கர்ஸ் அணியின் பாபர் அஸாம் தெரிவானார்.

★★★★★★

பீபா மகளிர் உலகக்கிண்ண உதைபந்து தொடரில் ஜப்பான், ஸ்பெயினை 4-0 என்ற கணக்கில் வீழ்த்திய நிலையில், குழு சி யிலிருந்து ஜப்பான் மற்றும் ஸ்பெயின் ஆகிய அணிகள் ரண்வுட் ஒப் 16 சுற்றுக்கு தெரிவாகின. அதன் படி அடுத்த சுற்றில் ஸ்பெயின் - சுவிட்சர்லாந்து அணிகளும் ஜப்பான் - நோர்வே அணிகளும் மோதவுள்ளன.

★★★★★★

குழு பி யிலிருந்து அவுஸ்திரேலியா மற்றும் நைஜீரியா ஆகிய அணிகள் ரண்வுட் ஒப் 16 சுற்றுக்கு தெரிவாகின. ஆஸி. அணி கனடாவை 4-0 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கான வாய்ப்பை பெற்றது.

## சன்பிளவர் வெற்றிக் கிண்ணம்: சம்பியனானது சம்மாந்துறை எஸ்.எஸ்.சி



மாளிகைக்காடு நிருபர்

சாய்ந்தமருது சன்பிளவர் விளையாட்டுக் கழகத்தின் 40ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற சன்பிளவர் வெற்றிக் கிண்ணத்துக்கான போட்டியில் கல்முனை ஜிம்ஹானா அணியை வீழ்த்தி சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சாய்ந்தமருது பொது மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் 46 ஓட்ட வித்தியாசத்தில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

சன்பிளவர் விளையாட்டுக் கழக பொதுச் செயலாளர் ஏ.எஸ். அஸ்வரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவர் எம்.ரீ.எம். நௌசாத் தலைமையில் இடம்பெற்ற போட்டி நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.என்.எம். றம்சான், கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணைக்குழு பணிப்பாளர் சபை உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா, சாய்ந்தமருது பொது நிறுவனங்கள் அமைப்பின் தலைவர் ஏ.எல். பரீட் , சாய்ந்தமருது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது பிரதேச விளையாட்டுக் கழகங்களின் சம்மேளன நிர்வாகிகள், சாய்ந்தமருது சன்பிளவர் விளையாட்டுக் கழக நிர்வாகிகள் மற்றும் போட்டித் தொடரின் அனுசரணையாளர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்த லிவர்பூல்



பேருவளை நிருபர்

தர்கா நகர் லிவர்பூல் (master side) பிரிவுக்கும் லிவர்பூல் (youth side) பிரிவுக்குமிடையில் தர்கா நகர் புட்சல் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற போட்டியில் Master side பிரிவு 3 -1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. Master side பிரிவு வீரர் முஹம்மத் நிப்ராஸ் 2 கோல்களையும் முஹம்மத் ஹிஸ்னி 1 கோலையும் பெற்றுக்கொண்டதோடு youth side சார்பில் முஹம்மத் யூஸுப் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தார்.

Master side பிரிவுக்கு முஹம்மத் ரிஸான் தலைமை வகித்ததோடு youth side பிரிவுக்கு முஹம்மத் யூஸுப் தலைமை வகித்தமை குறிப்பிடத்தக்கது. பரிசளிப்பு விழாவில் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பேருவளை உதைபந்தாட்ட சங்கப் பொருளாளர் ஏ.ஜே.எம்.அக்பர்,கழக ஆலோசகர் எம்.ஆர்.எம்.ஹில்மி மற்றும் லியாஸ்தீன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7